# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 005 வள்ளுவர் ஆண்டு: 2045

கார்த்திகை 15, திங்கட்கிழமை 01.12.2014


காலநிலை

மழையுடன் கூடிய காலநிலை காணப்படும். காற்று மணிக்கு 70 கி.மீ. வேகத்தில் வீசும்.

## கடந்த மாதம் 217 பேருக்கு டெங்கு

யாழ்.குடாநாட்டில் கடந்த மாதத்தில் மட்டும் 217 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியவர்களின் அதிகூடிய எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டில் கடந்த மாதத்திலேயே பதிவாகியுள்ளது என்று வட மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பக்.02

## சரத் என் சில்வா அடித்தார் 'பல்டி'

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் தேர்தலில் போட்டியிட்டால் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாகக் கூறிய முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா தற்போது வழக்குத் தாக்கல் செய்யப்போவதில்லை என்று கூறியுள்ளார். நீதிமன்றில் முறையீடு செய்தும் பயனில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

பக்.10

## பூங்கன்று நடுவதை விட்டு வீதியை புனரமையுங்கள்

மாநகர சபை வீதிகளில் பூங்கன்றுகள் இருப்பதை மக்கள் விரும்பவில்லை. சிரமமற்ற முறையில் சிறந்த போக்குவரத்தையே விரும்புகின்றனர். எனவே பூக்கன்றுகள் நடும் நிதியில் வீதியைப் புனரமையுங்கள் என்று கூறியுள்ளார் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்.

பக்.05

# தடைகளை மீறி மக்கள் வெள்ளம்

# பரப்புரை ஆரம்பம்

### அனைத்தையும் நானறிவேன். தெரிந்தவற்றை கூறுவேன் மைத்திரிபால மேடையில் முழக்கம்



கொழும்பு, டிசெ.1

எதிரணிகளின் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தனது முதலாவது பரப்புரைக் பொதுக் கூட்டத்தை நடத்தினார். அவரது சொந்த இடமான பொலநறுவையில் நடத்தப்பட்ட கூட்டத்தில் தடைகளையும் மீறிப் பெருமளவு மக்கள் கலந்துகொண்டனர்.

நேற்று மைத்திரியின் பரப்புரைப் பொதுக்கூட்டம் நடத்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

பக்.22



*ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவோ, அவரது குடும்பத்துக்கு எதிராகவோ தேர்தலில் போட்டியிடவில்லை. இலஞ்சம், ஊழல், வீண் விரயம் மற்றும் குடும்ப ஆட்சி என்பவற்றுக்கு எதிராகவே களமிறங்கியுள்ளேன். மஹிந்த மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நாட்டில் கட்சிகளே இருக்காது. நான் அனைத்தையும் அறிந்திருக்கின்றேன். எனக்கு தெரிந்தவற்றை எதிர்காலத்தில் கூறுகின்றேன்.*

*– மைத்திரிபால சிறிசேன*

## காணி அமைச்சர் நேற்று மேடையில் கண்ணீர் வடிப்பு

### சொல்வதை கேட்பதில்லையாம் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், டிசெ. 01


ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமும், அவரது புதல்வரிடமும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் நடக்கும் அநியாயங்கள் பற்றிச் சொன்னேன். அவர்கள் எனது பேச்சைக் கேட்கவில்லை. இவ்வாறு தெரிவித்த காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், மேடையில் இரண்டு நிமிடங்கள் வரையில் கண்ணீர் விட்டு அழுதார்.

தம்புள்ளை கலேவெல பிரதேசத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதிக் கிளைக் கூட்டம் நேற்று நடந்தது. இதில் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் கலந்து கொண்டார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதனோல்காரர்களுக்கும் ஹெரோயின் வியாபாரிகளுக்கும் அடிமைப் பட்டுள்ளது. நான் சுத்தமான இலங்கையன். எனக்கு நடந்த அநியாயங்களை மூன்று அல்லது நான்கு தட்வை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எடுத்துக் கூறினேன்.

பக்.22

## தமிழ் மொழிக் கொலையை கண்டு கொள்ளாத எதிரணி




யாழ்ப்பாணம், டிசெ.1

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் கன்னிப் பரப்புரைக் கூட்டம் நேற்று பொலநறுவையில் ஆரம்பமானது. அந்தக் கூட்டத்தின்போது மேடையில் தமிழ் கொலையுடன் பதாகை வைக்கப்பட்டிருந்தது.

பக்.22

## பரப்புரை சுவரொட்டியில் பாப்பரசர்:

### கடும் அதிருப்தி

பாப்பரசரின் படத்தை தேர்தல் பரப்புரைச் சுவரொட்டியில் உபயோகித்திருப்பது குறித்து பாப்பரசரின் பயணத்துக்கான ஊடக மற்றும் தகவல் நிலையம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

அந்தநிலையத்தின் பணிப்பாளர் அருட்தந்தை சிறில் காமினி இது குறித்துக் கூறும்போது,

இத்தகைய பரப்புரைகளை மேற்கொள்வோர் ஒழுக்கத்தை மேற்கொள்பவர்களாக இருந்தால், கூறுவதை மதித்து நடப்பார்கள் என்று தெரிவித்துள்ளார்.

பக்.21



## மஹிந்த - மு.கா. திடீரென சந்திப்பு

எதிர்வரும் ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையே முக்கிய சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னரான சாதக, பாதக நிலைமைகளைக் கருத்தில் கொண்டே ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்று அந்தக்கட்சியின்செயலாளர்ஹசன் அலி கூறியுள்ளார்.

பக்.21

## வடக்கில் கன மழை 38,887 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.1

வடக்கில் பெய்து வரும் கன மழையால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கின்றது. 10 ஆயிரத்து 52 குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 887 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது. ஆயிரத்து 889 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளன.

பக்.02

உதயனில் வெளியாகும் பரீட்சை வினாத்தாள் இன்று தவிர்க்க முடியாத காரணத்தால் வெளியாகவில்லை. இன்று வெளியாக விருந்த வினாத்தாள் நாளைய உதயனில் வெளியாகும். மாணவர்களே பொறுத்தருள்க!

## தேர்தல் களம் சூடு பிடிப்பு கட்சி தாவல் படுவேகம்

யாழ்ப்பாணம், டிசெ.1

ஜனாதிபதித் தேர்தல் களம் சூடு பிடித்துள்ள நிலையில், கட்சித் தாவல்கள் விறுவிறுப்படைந்துள்ளன. அந்த வரிசையில் இன்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து அமைச்சர் நவீன் திஸநாயக்கா பொது எதிரணியில் இணைந்து கொள்ளவுள்ளார். ஆளும்கட்சியிலிருந்து விலகமாட்டேன் என்று பகிரங்கமாக கடந்த வாரம் தெரிவித்த நவீன் திஸநாயக்கா, நேற்று தனது அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதற்கான கடிதத்தை ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பியுள்ளார். வேட்புமனுத் தாக்கலுக்கு முன்னராக ஆளும்கட்சியிலிருந்து மேலும் 20 அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொது எதிரணியில் இணைந்து கொள்வார்கள்

பக்.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# செய்திகள்



## மஹிந்தவின் பரப்புரைக்காக யாழில் நீலப்படையணி

யாழ்ப்பாணம், டிசெ.1

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஏற்பாட்டில் நீலப்படையணியை உருவாக்கும் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

தேர்தலின் போது மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக மக்கள் வாக்களிக்க வேண்டும் என்ற பரப்புரைகளை எதிர்வரும் 10 ஆம் திகதியில் இருந்து இந்த நீலப்படையணியினர் மேற்கொள்ளவுள்ளனர்.

இதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் வேலைவாய்ப்பைப் பெற்ற இளைஞர் யுவதிகளில் 15 பேர் கொண்ட ஒவ்வொரு குழுவினரும் மஹிந்த ராஜபக்ஷவால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை துண்டுப்பிரசுரங்கள் ஊடாக வீடு வீடாகச் சென்று பரப்புரை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (ற-14)

## 'பைக்கோ' மோதி இளைஞர் சாவு

மன்னார், டிசெ.1

மன்னார் முருங்கன் பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் வவுனியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா குடியிருப்பு பகுதியை சேர்ந்த நடராசா தியாகலிங்கம் என்பவரே உயிரிழந்தவராவார்.

முருங்கனில் அமைந்துள்ள தனியாருக்குசொந்தமான ஒப்பந்த கட்டட நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் இளைஞர் ஒருவர், கடந்த வியாழக்கிழமை பணிகளை முடித்துக் கொண்டு வீடு திரும்பும் வேளை குறித்த நிறுவனம் அமைந்துள்ள வளாகத்தில் மண் அகழ்வு செய்யும் 'பைக்கோ' இயந்திரம் இவரின் மேல் மோதியதை அடுத்து சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார். (ற-421)

# வடக்கில் கன மழை 38,887 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 01

வடக்கு மாகாணத்தில் பெய்து வரும் கடும் மழையால் பாதிக்கப்பட்டவர்களது எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றது. 10 ஆயிரத்து 52 குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 887 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது. அவர்களில் ஆயிரத்து 889 குடும்பங்கள் 25 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வார காலமாக வடக்கு மாகாணம் முழுவதிலும் கனமழை பெய்து வருகின்றது. அதனால் கிளிநொச்சி மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன. தாழ்ந்த நிலப் பகுதிகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. அதையடுத்து மக்கள் இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் மழை சற்று ஓய்ந்திருந்தபோதும், நேற்று அதிகாலை முதல் மீண்டும் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. அதனால் பாதிப்புகள் அதிகரித்துள்ளன.

ப.1 விரிவு

யாழ்.மாவட்டத்தில் 7535 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்து 613 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 487 வீடுகள் பகுதியளவிலும், 54 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளது. 370 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 348 பேர் 10 நலன்புரி நிலையங்களில் தங்க வைக் கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத் தில் மேலதிக பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. 174 குடும்பங்களைச் சேர்ந்த 549 பேர் மாத்திரமே பாதிக்கப்பட்டுள்ளனர். அதே போன்று மன்னார் மாவட்டத்திலும் இடர் பாதித்தவர்களது எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படவில்லை. வவுனியா மாவட்டத்தில் 877 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 28 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## இன்றே சோதிப்போம்

உலகளாவிய ரீதியில் மட்டுமன்றி இலங்கையிலும் எச்.ஐ.வி. தொற்று எல்லாப் பிரதேசங்களிலும் காணப்படுகின்றது.

புதிதாக ஏற்படும் எச்.ஐ.வி. தொற்றை, எச்.ஐ.வி.யால் ஏற்படும் இறப்பை, எச்.ஐ.வி. தொற்றுள்ளவரை பாகுபடுத்துவதை , பூச்சியமாக்க வேண்டும் என்ற இலக்குடன் அனைவரும் செயற்பட வேண்டும்.

எய்ட்ஸ் நோய் 1981 இலே அமெரிக்காவிலேயே முதலில் இனங்காணப்பட்டது.

ஆராய்ச்சிகளின் விளைவாக 1983 இல் எச்.ஐ.வி. கிருமி இனங் காணப்பட்டது.

எச்.ஐ.வி. தொற்றை முற்றிலும் குணமாக்க மருந்துகள் கண்டுபிடிக்கப்பட வில்லை. ஆனால் கட்டுப்படுத்த மருந்துகள் உள்ளன.

எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்ட ஒருவர் மருந்து எதுவும் எடுக்காத நிலையில் சாசரி 10 வருடங்களின் பின்னரே எச்.ஐ.வி. நோயாளி ஆவார். அதுவரை அவர் சுகதேசி போன்றே இருப்பார். இக்காலப் பகுதியில் எச்.ஐ.வி. தொற்றும் அபாயம் உள்ளது. இக்காலத்தில் பாலியல் தொடர்புகள், இரத்ததானம், பிள்ளைப்பேறு மூலம் இன்னொருவருக்குத் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது.

தொற்று அடைந்தவரின் குருதியில், ஆண்களின் சுக்கிலப்பாயம், யோனிமடற் சுரப்பு, கருப்பைக்கழுத்துச் சுரப்பு, தாய்ப்பால் என்பவற்றில் எச்.ஐ.வி. வைரஸ் பெருமளவில் இருக்கும். உமிழ்நீர், கண்ணீர், வியர்வை, மலம், சிறுநீர் என்பவற்றில் தொற்று ஏற்படும் அளவில் வைரஸ் இருப்பது இல்லை.

யோனிமடல் வழி, குதவழி, வாய்வழி, உடலுறவு என்பன மூலம் ஆண் - பெண்ணிடையேயும் ஆண்-ஆண் இடையேயும் தொற்று ஏற்படலாம்.

### தொற்று ஏற்படாதிருக்க

1. நம்பிக்கையான ஒருவருடன் மட்டும் பாலுறவுத் தொடர்புகள்
2. மிக இளம் வயதில் (பதின்ம வயதில்) பாலுறவைத் தவிர்த்தல்
3. பாதுகாப்புறை பாவித்தல்.
4. மிக அவசியம் எனில் மாத்திரம் குருதிப் பரிமாற்றம்.
5. கர்ப்ப வதிகளில் தொற்று இருப்பதைச் சோதித்தல் தொற்றுள்ளவர் தகுந்த சிகிச்சையும், ஆலோசனையும் பெறுதல்.
6. தொற்றுள்ளவர் பாலூட்டுதலைத் தவிர்த்தல்.

### எச்.ஐ.வி. கடத்தப்படாத வழிகள்.

1. தொற்றடைந்த ஒருவரைத் தொடுதல், கைகுலுக்குதல்
2. தொற்றடைந்தவருடன் ஒன்றாக வாழுதல்.
3. தொற்றடைந்தவருடன் விளையாடுதல்.
4. தொற்றடைந்தவர் பயன்படுத்திய உணவுப் பாத்திரம், உடைகள், துவாய் மூலம்.
5. நுளம்பு, மூட்டைப்பூச்சி மூலம்.
6. தும்மல், இருமல் மூலம்.
7. தொற்றடைந்தவர் பயன்படுத்திய மலசலகூட ஆசனத்தை பயன்படுத்துவதால்.

---

இலங்கையில், தற்போது தாயிலிருந்து குழந்தைக்கு எச்.ஐ.வி. கடத்தப்படுவதைத் தடுப்பதற்காக கர்ப்ப காலத்தின் ஆரம்பத்திலேயே எச்.ஐ.வி. பரிசோதனை செய்யப்படுகின்றது. தொற்று இருப்பது காணப்பட்டால் சிகிச்சை வழங்கப்படும். சத்திர சிகிச்சை மூலம் குழந்தைப் பேறும், பின்னர் தாய்ப்பால் கொடுக்காமல் அதற்கான மாற்றுணவு வழங்கப்படும்.

1. பாலியல் சிகிச்சை நிலையத்திலேயே எச்.ஐ.வி. பரிசோதனை முற்றிலும் இலவசமாக செய்யப்படும்.
2. நம்பகத் தன்மை பேணப்படும்.
3. ஒருவர் தானாக நேரடியாக 33 ஆம் அறைக்கு வந்து குருதிப்பரிசோதனைகளைச் செய்யலாம்.
4. பெயரில்லாமல் பதிவெண்ணுடன் மட்டுமே இரத்தம் எடுக்கப்பட்டு பரிசோதனை செய்யப்படும்.

2014 ஆம் ஆண்டு 3 ஆம் காலாண்டு இறுதியில் இலங்கையில் எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டோர் = 2014 , எச்.ஐ.வி. நிலையில் = 535, எச்.ஐ.வி. இறப்பு =331

சிகிச்சை, ஆலோசனை பெறும் இடம் 33 ஆம் அறை, யாழ் போதனா வைத்தியசாலை, தொலைபேசி - 0213203962

சிகிச்சை நேரம் திங்கள் - வெள்ளி : மு.ப. 8 - பி.ப. 4, சனி - மு.ப. 8 - நண்பகல் 12 ஞாயிறு, விடுமுறை தினங்களில் மூடப்பட்டிருக்கும்.

# யாழில் கடந்த மாதம் 217 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், டிசெ .1

யாழ்.குடாநாட்டில் கடந்த மாதம் மாத்திரம் 217 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த வருடத்தில் அதிகமானோர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியமை கடந்த மாதத்திலேயே என்று வடமாகாண சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது. அவர்களில் யாழ். போதனா வைத்தியசாலையில் மாத்திரம் 203 பேர் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வருடத்தின் முதல் 9 மாதங்கள் வரை டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 150 க்குக் குறைவாகவே காணப்பட்டது.

ஆனால் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் இந்த எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. ஒக்ரோபர் மாதத்தில் 212 பேரும் நவம்பரில் 217 பேரும் பதிவாகியுள்ளனர்.

மிக அதிகளவில் டெங்குத் தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை யாழ். மாநகர எல்லை மற்றும் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவிலேயே காணப்படுகிறது. யாழ்.மாவட்டத்திலுள்ள 12 சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகளிலும் டெங்கு தொற்று காணப்படுகின்றபோதும் குறித்த இரண்டு பிரிவுகளில் அந்த எண்ணிக்கை அதி கரித்துக் காணப்படுகின்றது.

ப.1 விரிவு

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடத்தில் டெங்குத் தொற்றுக்கு உள்ளானோரின் எண்ணிக்கை ஆயிரத்து 314 ஆகப் பதிவாகியுள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலையில் மாத்திரம் 901 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் 82 பேரும், இந்த வருடத்தில் 239 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மாதம் 11 பேரும், இந்த வருடத்தில் 67 பேரும், முல்லைத்தீவில் கடந்த மாதம் 10 பேரும், இந்த வருடம் 101 பேரும், வவுனியாவில் கடந்த மாதம் 8 பேரும், இந்த வருடம் 120 பேரும் டெங்கு தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் கடந்த மாதம் 3 ஆயிரத்து 366 பேரும், நாடளாவிய ரீதியில் இந்த ஆண்டு 39 ஆயிரத்து 978 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ற-4)

## உதவ விரும்புவோர் உதவலாம்

யாழ்ப்பாணம், டிசெ. 1

யாழ்.நகரில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வர்த்தக சங்கத்தால் உலர் உணவுப் பொருள்கள் இன்று வழங்கப்படவுள்ளன. அதற்கு உதவ விரும்பும் வர்த்தகர்களை, வர்த்தக சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கத் தலைவர் இ.ஜெயசேகரம் கேட்டுள்ளார். யாழ்.நகரில் பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இவர்களுக்கு அவசரமாக உலர் உணவுகள் வழங்கப்பட வேண்டியுள்ளது. உலர் உணவு வழங்க விரும்பும் வர்த்தகர்கள், வர்த்தக சங்கத்துக்கு தமது பொருள்களை கொண்டு வந்து ஒப்படைக்க முடியும். வர்த்தக சங்கத்துக்குத் தெரியப்படுத்தினால், நேரடியாக வர்த்தக சங்கமே வர்த்தக நிலையத்துக்கு வந்து பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: வேலையில் முன்னேற்றம் உண்டாகும். உங்களுக்கு பின்னால் உங்களைப் பற்றி புறம் பேசியவர்கள் உங்களிடம் சரண் அடைவார்கள். எதிலும் எச்சரிக்கை தேவை.

**இடபம்**: எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். உங்களுக்கு வரும் முன்கோபத்தை தவிர்ப்பது முன்னேற்றத்துக்கு உதவும். புதிய நண்பர்கள் சேர்க்கையும் ஏற்படும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்**: எதிர்ப்புகள் நீங்கும். போட்டிகள் பற்றிய கவலையை விட்டுவிட்டு தொழில் வியாபாரத்தில் கவனம் செலுத்துவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வெளியூர் மாற்றங்கள் உண்டாகலாம்.

**கடகம்**: சக ஊழியர்களிடம் பேசும்போது கோபப்படாமல் இருப்பது நன்மை தரும். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்த மனத்தாங்கல் நீங்கி மகிழ்ச்சியும், சகஜ நிலையும் காணப்படும். பிள்ளைகளிடம் பேசும் போது நிதானமாக பேசுவது நல்லது.

**சிங்கம்**: கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. உங்களை எல்லோரும் நேசிப்பார்கள். எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகும். நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும்.

**கன்னி**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேண்டிய உதவிகள் மேலதிகாரிகள் மூலம் கிடைக்கும். பொறுப்புகள் கூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும்.

**துலாம்**: எச்சரிக்கையாக இருப்பதன் மூலம் ஆபத்தைத் தடுக்கலாம். பிள்ளைகள் மனம் மகிழும்படி நடந்து கொள்வார்கள். வீண் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்**: பொறுப்புகள் அதிகரிக்கும். கல்வியில் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். செல்வம் சேரும். வெளியூர் பயணங்களால் அலைச்சலும், எதிர்பாராத பொருள் இழப்பும் இருக்கும்.

**தனுசு**: கவனமாக இருப்பது நல்லது. திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். எதிர்ப்புகளை சமாளிக்கும்போது கவனம் தேவை. வியாபாரம் தொடர்பான முயற்சி வீண் முயற்சியாக இருந்தாலும் பின்னாளில் அதற்கான பலன் கிடைக்கும்.

**மகரம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலை சுமை இருக்கும். எப்படியும் செய்து முடித்து நல்ல பெயர் வாங்கி விடுவீர்கள். குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடக்கும். நிம்மதி ஏற்படும்.

**கும்பம்**: உறவினர்கள் வருகையும் அவர்களால் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள். பெண்களுக்கு வீண் அலைச்சலும் எதிர்பாராத செலவும் உண்டாகும். கவனம் தேவை. முயற்சிகள் தாமதப்படும்.

**மீனம்**: துன்பங்கள் நீங்கி வாழ்க்கையில் இன்பம் உண்டாகும். நினைத்த காரியத்தைச் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். உடைமைகளை கவனமாகப் பாதுகாத்துக் கொள்வது நல்லது.

## உலகின் விலை மதிப்புமிக்க வைர கற்கள் பதித்த

# பூட்ஸ்

டுபாய் உலக வர்த்தக மையத்தில் நாளை மறுதினம் 3 ஆம் திகதி ஆரம்பித்து 6 ஆம் திகதி வரை டுபாய் சர்வதேச நகை வாரம் 2014




என்றபெயரில் சர்வதேச நகை கண்காட்சி நடைபெற உள்ளது இதில் உலக அளவில் ஏராளமான நாடுகள் பங்கேற்க உள்ளன. இதில் உலகெங்கும் உள்ள நகை தயாரிப்பாளர்கள் தங்களின் அழகிய ஆபரண படைப்புகளை இங்கு பொதுமக்களின் பார்வைக்கு வைத்து விற்பனையை அதிகரிக்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் ஆட்டொ ஜுவல்ஸ் சார்பில் 39,083 வைர கற்கள் பொருத்தப்பட்ட உலகின் விலை மதிப்புமிக்க கண்களைப் பறிக்கும் ஆடம்பர காலணி பார்வைக்கு வைத்து விற்பனை செய்யப்படவுள்ளது. இதன் மதிப்பு இலங்கை ரூபாவில் சுமார் 42 கோடிக்கும் அதிகமாகும்.



நல்ல முடிவுகள்
அனுபவத்திலிருந்து
பிறக்கின்றன. ஆனால்
அனுபவமோ தவறான
முடிவுகளிலிருந்து
கிடைக்கின்றது

பில்கேட்ஸ்



# மாறும் விஜய்

ஒரேவிதமான தோற்றத்தில் நடித்து வரும் விஜய், முதல் முறையாக குள்ளனாக நடிக்க உள்ளார்.
சிம்புதேவன் இயக்கும் சரித்திர கால திரைப்படத்தில் விஜய், ஸ்ருதிஹாசன், ஹன்சிகா, ஸ்ரீதேவி, சுதீப் உட்பட பலர் நடிக்கிறார்கள். இந்த திரைப்படத்தின் படப்பிடிப்பு தொடங்கிவிட்டது.
திரைப்படத்துக்காக பிரமாண்ட மன்னர் மாளிகை செட் போடப்பட்டுள்ளது. இந்தப் படத்தில் இரட்டை வேடத்தில் விஜய் நடிக்கிறார். அதில் ஒரு விஜய் குள்ளன்.
மன்னர் விஜய்க்கு ஜோடியாக ஸ்ருதிஹாசன் நடிக்கிறார். ஸ்ரீதேவி ராணி வேடத்தில் நடிக்கின்றார். அவரது மகளான ஹன்சிகாவின் காதலராக குள்ளன் விஜய் நடிக்க உள்ளார். கதைப்படி குள்ளன் விஜய் ஏழை. ஸ்ரீதேவியின் தளபதியாக சுதீப் நடிக்கிறார். அபூர்வ சகோதரர்கள் படத்தில் கமல்ஹாசன் குள்ளனாக நடித்திருந்தார். அதற்கு பிறகு முழு படத்திலும் எந்தஹீரோவும் இது போல் நடிக்கவில்லை. இப்போது விஜய் அது போல் நடிப்பதாக தகவல் கசிந்துள்ளது.



## எப்படி ஓர் அறிவு paaa




## கொஞ்சம் சிரிங்க பாஸ்



சட்டத்தரணி [illegible]மா, போன வாரம் தா[illegible] புருஷனிடமிருந்து விவாகரத்[illegible]டாய். வாங்கிக் கொடுத்தேன். இப்போது வந்து என் புருஷனோட சேர்த்து வையுங்கள் என்று கேட்கின்றியே ஏன் ?
மனைவி : அந்த ஆளு என் கண் முன்னாலயே சந்தோஷமா திரியுறான். என்னால சகிக்க முடியல....

நோயாளி : எனக்கு சலரோகம் (சர்க்கரை வியாதி) இருக்கு என்று சொல்றீங்களா ?
வைத்தியர் : ஆம்
நோயாளி : எனக்கு ஒரு சந்தேகம்
வைத்தியர் : சொல்லுங்க
நோயாளி : என் பெயர் சீனிவாசன். வாசன் என்று பெயரை சுருக்கினால், சர்க்கரை வியாதிபோயிடுமா ?

ஒரு ஹோட்டலில், 'நீங்கள் சாப்பிட்டதற்கு பணம் கொடுக்க தேவையில்லை. உங்கள் பேரன் வந்து கொடுப்பான்' என்று எழுதியிருந்ததை கண்டதும் நம்ம மன்னார் உள்ளே போய் ஒரு வெட்டு வெட்டினார்.
சப்ளையர் : இந்தாங்க பில்
மன்னார் : பேரன் குடுப்பான்னு ..........
சப்ளையர் : இது உங்க தாத்தா சாப்பிட்டதுக்கு..
மன்னார் : !!!!!!!!!!!!!!!

அவன் : என்னோட நாய் காணாமல் போயிடுச்சிடா
இவன் : பேப்பர்ல விளம்பரம் குடுடா
அவன் : அதுக்கு படிக்கத் தெரியாதே

அரச வைத்திய சாலைகளில் வைத்தியர்



தனியார் வைத்திய சாலைகளில் வைத்தியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டும் மழையால் வன்னியில் அவலம்

## தற்காலிக கொட்டில்கள் வெள்ளத்தில் 5 ஆண்டுகளாக தொடரும் கொடுமை

கிளிநொச்சி, டிசெ.1

கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களில் தற்போது பெய்து வரும் கனமழை காரணமாக மீள் குடியேற்றப்பட்ட காலம் முதல் பழுதடைந்த தற்காலிகக் கொட்டகைகளில் வாழ்ந்து வரும் மக்கள் கடும் சிரமங்களையும் கஷ்ரங்களையும் எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டபோது, 6 மாதங்களுக்கு எனத் தற்காலிகமாக வழங்கப்பட்ட கொட்டகைகளிலேயே அவர்கள் கடந்த 5 வருடங்களுக்கும் மேலாக அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்த மக்கள் குடியிருக்கும் காணிகளுக்கான காணி அனுமதிப் பத்திரம் இல்லை என்று அரசினால் கூறப்பட்டே நிரந்தர வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படவில்லை. நீண்ட காலமாக இவர்கள் அவலப்படுகின்றார்கள்.

ஆனாலும் கிளிநொச்சியில் சில பகுதிகளில் காணி அனுமதிப் பத்திரங்கள் இல்லாதவர்களுக்கும் நிரந்தர வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும், அரசியல்வாதிகள், அரச உயர் அதிகாரிகள் ஆதரவைப் பெறாத பாதிக்கப்பட்ட பல மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டே வருவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உமையாள்புரம், சிவபுரம், பன்னங்கண்டி போன்ற பல கிராமங்களில் பெரும் எண்ணிக்கையான குடும்பங்களுக்கு இன்னமும் நிரந்தர வீட்டுத் திட்டங்கள் அரசினால் வழங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருவதாக அவர்கள் கூறுகின்றனர். (த–426)



## ஊடகவியலாளர்களுக்கு ஆபத்தான நாடு இலங்கை

### 'என் எழுத்தாயுதம்' நூல் அறிமுக விழாவில் கவிஞர் சோ.பத்மநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 1

ஊடகவியலாளர்களுக்கு இன்னும் ஆபத்தான நாடாகவே இலங்கை காணப்படுகிறது. வன்முறைகளும் கடந்தகால, நிகழ்கால சம்பவங்களும் அதனைக் காட்டுகின்றன என்று கவிஞர் சோ.பத்மநாதன் தெரிவித்தார்.

மூத்த ஊடகவியலாளர் ந.வித்தியாதரன் எழுதிய 'என் எழுத்தாயுதம்' நூல்அறிமுகவிழா இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

திசைகாட்டி குழும அனுசரணையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு உதயன் நாளிதழின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் தலைமை தாங்கினார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா சிறப்புப் பிரதியை வழங்கிவைக்க யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய தூதுவர் தட்சணாமூர்த்தி அதனைப் பெற்றுக் கொண்டார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன், மு.சந்திரகுமார், வட மாகாணசபை உறுப்பினர் த.சித்தார்த்தன், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பாஸ்கரா, பத்தி எழுத்தாளர் ஆ.யதீந்திரா, மூத்த ஊடகவியலாளர் அ.நிக்ஸன் ஆகியோரும் உரையாற்றினர்.(ந–4,21)

## போதையில் இடையூறு: சமூகப் பணி செய்ய உத்தரவு

தென்மராட்சி, டிசெ.1

மதுபோதையில் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்த மூவருக்கு தலா 80 மணிநேர சமூகப் பணியில் ஈடுபடுமாறு சாவகச்சேரி நீதிமன்றில் புதன்கிழமை உத்தரவிடப்பட்டது.

6 மாத காலங்களில் 80 மணித்தியாலங்கள் கூடுதல் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயம் சார் சீர் திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டது. (வ–9)



## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 01

வடமராட்சியில், கடும் மழை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதியுதவியில் உலர் உணவுப் பொருள்கள் நேற்று மாலை வழங்கப்பட்டன.

தும்பளை கிழக்கு, கரவெட்டி – இராஜகிராமம், கம்பர்மலை, பொலிகண்டி ஆகிய பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் மற்றும் வலிவடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியில் தங்கியிருக்கும் மக்களில் மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்குமே . இவ்வாறு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சோ.சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் இதற்கு நிதியுதவி வழ்ங்கியிருந்தனர்.

மழை வெள்ள இடரால் இடம்பெயர்ந்து தங்கியுள்ள இடங்களுக்கு நேரடியாகச் சென்று உணவுப் பொருள்களைக் கையளித்துள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களின் குடி தண்ணீர்ப்பிரச்சினை, மலசலகூடப் பிரச்சினை ஆகியவற்றை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடலில் மீன் பிடிக்கச்சென்று காணாமற்போய், பின்னர் கரை திரும்பிய பருத்தித்துறை, சக்கோட்டையைச் சேர்ந்த மூன்று மீனவர்களின் வீடுகளுக்கும் சென்று ஆறுதல் தெரிவித்ததுடன், அவர்களின் கடலில் மூழ்கிய பெறுமதிமிக்க படகு மற்றும் வலைகளை மீட்டெடுக்க உதவி புரிவதாகவும் உறுதியளித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா மற்றும் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தமிழரசுக் கட்சியின் பொருளாளர் பெ.கனகசபாபதி, மாகாணசபை உறுப்பினர்களான பா.கஜதீபன், வே.சிவயோகன், மற்றும் வலி வடக்குப் பிரதேசசபைத் தலைவர் சோ.சுகிர்தன், கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் பொ. வியாகேசு, பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சபா.ரவீந்திரன் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் ஆகியோர் பங்குபற்றினர். (ந–5)

## வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.1

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் இளவாலை கிராமத்தில் டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கிராம மக்கள் அனைவருக்கும் ஒலிபெருக்கி மூலமாக டெங்கு நுளம்பு பெருகத்தக்க கழிவுப் பொருள்களை சேகரித்து பொதி செய்து வைத்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருப்பதோடு வலி.வடக்கு பிரதேச சபையின் வாகனம் மூலமாக சங்க உறுப்பினர்கள் வீடுகள் தோறும் சென்று கழிவுப் பொதிகளை சேகரிப்பதில் ஈடுபடுகின்றனர்.

இன்று திங்கட் கிழமை தொடக்கம் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலைகளிலும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை மற்றும் பிரதேச செயலகம் என்பவற்றிலும் மற்றும் பொது இடங்களிலும் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் தெரு நாடகங்களையும் நடத்த உள்ளனர். (வ–14)

## எயிட்ஸ் தொற்று யாழில் அதிகம்

### பரிசோதனைகளுக்கு தயக்கம் வேண்டாம் யாழ்.மருத்துவ சங்கம் அறிவுறுத்துகிறது

யாழ்ப்பாணம், டிசெ. 1

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது எயிட்ஸ் தொற்று யாழ்ப்பாணத்திலேயே அதிகமாக இனங்காணப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தைப் போன்றே கிளிநொச்சி மாவட்டத்திலும் எயிட்ஸ் நோயை இனங்காணக்கூடிய அபாயநிலை ஏற்பட்டுள்ளது– என்று தெரிவித்துள்ள யாழ்.மருத்துவ சங்கம், உரிய சிகிச்சைகள் மூலம் தொற்றுக்குள்ளாகியவர்கள் ஏனையோர் போன்று வாழ முடியும் என்றும் தெரிவித்துள்ளது.

20 வயதுக்குட்பட்ட சிறுமிகள், பெண்கள் ஏமாற்றமடைந்து அல்லது ஏமாற்றப்பட்டு இளவயதுத் திருமணம் உட்பட பல வகைகளில் எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளாகின்றனர். பாதுகாப்பற்ற உடலுறவு காரணமாகவே பலர் எச்:ஐ. வி. வைரஸ் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். எயிட்ஸ் தொற்று ஏற்பட்டாலும் அதனை உடனடியாக அடையாளம் காணமுடியாது. சுமார் 10 வருடங்களின் பின்னரே அதனை அடையாளம் காண முடியும். – என்றும் மருத்துவ சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.


பாதுகாப்பற்ற உடலுறவு காரணமாகவே அதிகளவில் எயிட்ஸ் தொற்றுவதாக இருந்தாலும், கர்ப் பிணித் தாய் மூலமாகக் குழந்தைக்கும், தாய்ப்பாலூட்டுவதாலும் குழந்தைக்கு எயிட்ஸ் பரவுகிறது. அதுதவிர போதை வஸ்து பாவனை, பச்சைகுத்தும் உபகரணம் மூலமாகவும், ஓரினச் சேர்க்கை மூலமாகவும் எயிட்ஸ்நோய் பரவுகிறது– என்றும் மருத்துவ சங்கம் தெரிவித்தது.

எயிட்ஸ் நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக செய்தியாளர் சந்திப்பொன்றை யாழ்.மருத்துவ சங்கம் யாழ். போதனா வைத்தியசாலையில் நடத்தியது. அதிலேயே மேற்குறித்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

எயிட்ஸ் பரிசோதனை மேற்கொண்டால் எயிட்ஸ் இருக்கிறதா என்பதனை உறுதிப்படுத்தலாம். உரிய சிகிச்சையைப் பெற்று ஏனைய பொதுமக்களைப் போல் வாழமுடியும். அது வெளியேயுள்ள எவருக்கும் தெரியாது. போதனா வைத்தியசாலையில் உள்ள பாலியல் நோய்த்தடுப்பு சிகிச்சை நிலையத்துக்குச் சென்று பரிசோதனை மேற்கொள்ளுங்கள்.

போதனா வைத்தியசாலையில் பரிசோதனை மேற்கொள்ள வந்தால் உங்கள் பெயர் உள்ளிட்ட எந்தத் தகவலும் எவருக்குமே தெரியாது. ரத்தத்தைப் பரிசோதனைக்கு அனுப்பும் போதுகூட பெயருக்குப் பதிலாக இலக்கமே வழங்கப்படும். மாணவர்கள், 22 வயதுக்குட்பட்டவர்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய சந்தர்ப்பம் உள்ளதனால் அவர்கள் மற்றும் பெற்றோர் மிக அவதானமாக இருக்க வேண்டும் – என்றும் அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டது. (ந–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பூக்கன்றுகள் நடும் நிதியில் வீதியைப் புனரமையுங்கள்

### யாழ் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திமதி

யாழ்ப்பாணம், டிசெ. 1

மாநகரசபை வீதிகளில் பூக்கன்றுகளை நட்டு அழகுபடுத்துவதிலும் பார்க்க அந்த நிதியில் வீதிகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யலாம். மக்கள் வீதிகளில் பூக்கன்றுகள் இருப்பதை விரும்பவில்லை. சிரமமற்ற சிறந்த போக்குவரத்தையே விரும்புகின்றனர். இவ்வாறு தெரிவித்தார் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தி.விமலசேன.

கடந்த சில மாதங்களாக யாழ். மாவட்ட போக்குவரத்து பொலிஸாருக்கும் அரச மற்றும் தனியார் திணைக்களங்களுக்குமான சந்திப்புக்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் இவ்வாறான சந்திப்பு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. குறித்த நிகழ்விலேயே தி.விமலசேன இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; யாழ் மாநகர சபையினால் குப்பைகள் சரிவர எடுக்கப்படுவதில்லை, வீதிகள் சரிவர பராமரித்து பேணப்படுவதில்லை என்றவாறான முறைப்பாடுகள் அடிக்கடி பதிவு செய்யப்படுகின்றன. மக்களின் அபிப்பிராயங்களைக் கேட்கும் போதெல்லாம் இவ்வாறான முறைப்பாடுகளே வருகின்றன.

அவற்றைத் தீர்க்காமல் வீதியில் பூக்கன்றுகளை நட்டு அழகுபடுத்துகிறார்கள். மக்களுக்கு தேவை பூக்கன்றுகளல்ல; சீரான போக்குவரத்தே. உங்கள் கடமைகளை ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளுங்கள்–என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ–ரி)

## 'எயிட்ஸ்' தினத்தை முன்னிட்டு யாழ்.நகரில் நேற்றுப் பேரணி

யாழ்ப்பாணம்.டிசெ.1

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டுயாழ்ப்பாண சிறைச்சாலையின் ஏற்பாட்டில் யாழ். நகரில் நேற்று விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

சிறைச்சாலையின் கைதிகள் மற்றும் திரிசாரணர்கள் ஒன்றிணைந்து பேரணியாக விழிப்புணர்வுப் பதாகைகளைத் தாங்கியவாறு சிறைச்சாலையில் இருந்து துரையப்பா விளையாட்டரங்கு வீதியூடாக மின்சார வீதியை அடைந்து பின்னர் யாழ்.நகர் பஸ் தரிப்பிடம் ஊடாக மீண்டும் சிறைச்சாலையை அடைந்தனர்.

கடும் மழையின் மத்தியிலும் நடைபெற்ற இந்தப் பேரணியில் 'கவனமாய் இருப்போம் கவனம் எடுப்போம்', வாலி பத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்க அவசியமான திறமைகளை வளர்த்துக் கொள்வோம்' என்ற தலைப்பில் உள்ளடக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்களையும் வழங்கினர். உலகளாவிய ரீதியில் எயிட்ஸ் தினம் இன்று அனுட்டிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ–14)




## பழைமை வாய்ந்த புளியமரம் சாய்ந்தது

வலி.வடக்கு, டிசெ.1

தெல்லிப்பழை கிழக்கு டி.ஆர்.ஓ ஒழுங்கையில் நின்ற பழைமை வாய்ந்த புளியமரம் ஒன்று அடியுடன் பாறி வீழ்ந்துள்ளது. இதனால் அந்த ஒழுங்கை ஊடான போக்குவரத்து பாதிக் கப்பட்டுள்ளது. அந்தப் பகுதிக் கான மின்சாரமும் துண்டிக்கப் பட்டது.

வியாழக்கிழமை மதியம் திடீரென இந்தப் பகுதியில் வீசிய காற்றினால் புளியமரம் அடியுடன் பாறி வீழ்ந்தது.இதனால் மின்சார வயர்கள் அறுந்தன. மின் கம்பம் ஒன்றும் முறிந்தது. குறித்த இடத்துக்கு வந்த மின்சார சபை ஊழியர்கள் மின்சாரத்தை துண்டித்துவிட்டுச் சென்றுள்ளனர்.

விழுந்த மரத்தை வெட்டி அகற்றினால் மட்டுமே மீண்டும் மின்சாரம் வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி. வடக்கு பிரதேச சபை குறிப் பிட்ட புளிய மரத்தை வெட்டி அகற்றும் பணியை மேற் கொண்டது. (த–86)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கோப்புகள் - குற்றச்சாட்டுக்களின் விவரங்களை வெளியிட முன்வருக

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன ஒருசமயம் தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பதவி விலகல் கடிதங்களை எழுதி வாங்கி சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டுவிட்டார் என்று கூறுவார்கள். அதன் மூலம் கட்சித் தாவலை தடுப்பது அவரது நோக்கமாக இருந்துள்ளது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசமைப்பைப் பயன்படுத்திக் கொண்டு நிறைவேற்று அதிகாரங்களைப் பிரயோகித்துவரும் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அதே பாணியில் ஒரு கோப்பை பராமரிப்பது இப்போது தெரிய வந்துள்ளது. அரசுத் தரப்பிலிருந்து எதிர்த்தரப்புக்குத் தாவியுள்ள அமைச்சர்கள் தொடர்பான கோப்புகள் தம்மிடமிருப்பதாகவும் ஆனால் அதனைத்தாம் பயன்படுத்தப் போவதில்லை என்றும் அநுராதபுரத்தில் ஒரு கூட்டத்தில் பேசும்போது ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

கட்சி மாறியுள்ளவர்களை எச்சரிப்பது மட்டுமல்ல இனி கட்சி மாறத் திட்டமிட்டிருப்பவர்களை எச்சரிப்பதும் இதன் நோக்கம் என்று கருதப்படுகின்றது. அதேவித கோப்புகள் தங்களிடமும் இருக்கின்றன என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உடனடியாகப் பதிலளித்திருந்தார். ஆனால் இரண்டு கோப்புகளுக்கும் நிறையவே வித்தியாசம் உண்டு.ஜனாதிபதியிடம் இருக்கும் கோப்புகளில் உள்ளவர்கள் மீது தமது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி அவர் நினைத்தால் நடவடிக்கை எடுக்க முடியும். காவலில் வைக்க முடியும். நீதிமன்றத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்க முடியும் என்பதையெல்லாம் இந்த எச்சரிக்கையின் மூலம் ஜனாதிபதி வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதே கருத்து. ஆனால் இவ்வளவு காலமும் ஏன் அவர்கள் மீது இந்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்காமல் இருந்தார் என்பது மிகப்பெரிய கேள்வியாக இன்று நாட்டில் விவாதிக்கப்படப்போகின்றது என்பது மட்டும் திண்ணம்.

ஊழல் புரிந்தவர்கள் மற்றும் வேறு குற்றம் புரிந்தவர்களின் விவரம் தெரிந்தும் அவர்கள் பற்றிய பட்டியல் தம்மிடம் இருந்தும் நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ளார் என்றால் இவைகளுக்கு ஜனாதிபதியும் உடந்தையாக இருந்துள்ளார் என்றல்லவா எண்ணத் தோன்றுகின்றது.

இதேபோன்று இன்னொரு விடயத்தை எதிர்த்தரப்பில் பொது வேட்பாளராகக் களம் இறங்கியுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும் வெளியிட்டிருக்கிறார். தேசிய மருந்துகள் -.மருந்துப் பொருள்கள் தொடர்பாக பேராசிரியர் சேனக்க பிபிலேவால் உருவாக்கப்பட்ட கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்குத் தாம் எடுத்த முயற்சிகளை சிலர் தடுத்து விட்டதாகவும் அதனால் நாடும் மக்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் சிறிசேன குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம் மருந்து கொள்வனவு நிறுவனங்களிடமிருந்து நூறுகோடி ரூபாய்க்கு மேல் தனிப்பட்ட ஒருவர் இலாபம் பெற்றிருப்பதாகவும் அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிட்ட அவர் சம்பந்தப்பட்டவர்களின் விவரங்களை விரைவில் வெளியிட விருப்பதாகவும் கூறியிருந்தார்.

கோப்புகள் பற்றி ஜனாதிபதியும் சுகாதாரத்துறை தலையீடுகள் பற்றி எதிர்த்தரப்பு பொதுவேட்பாளரும் பொதுப்படையாக கூறியிருப்பது மக்கள் மனங்களைக் குழப்புவதாக இருக்கும். அவைகளில் உள்ள உண்மைகளை இந்தச் சந்தர்ப்பத்திலாகுதல் வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளதை அவர்கள் மறைக்கலாகாது.

# ஆட்சி மாற்றம் உரிமைகளை வழங்குமா?

சேரலாதன்

விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த மஹிந்த ராஜபக்ஷவும், மைத்திரிபால சிறிசேனவும் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் மோதப் போகின்றனர். நேற்று வரை அன்புடன் உறவாடி ஒன்றாக இருந்து உணவருந்திக் களித்த இவர்கள் இன்று எதிரும் புதிருமான நிலையில் நிற்கின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு மீது மக்களின் அதிருப்தி அதிகரித்துச் செல்லும் நிலையில் தற்போது ஆளும் கூட்டணியின் முக்கியஸ்தரான மைத்திரிபால எதிரணிக்கு மாறியுள்ளமை அரசுத் தரப்பினருக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது. ஆனால் தமக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லையென அவர்கள் கூறி வருவதைக் காணமுடிகின்றது.

இந்த நிலையில் மைத்திரிபால சிறிசேன அரசியலில் தூய்மையும், நேர்மையும் மிக்கவர் என்பதால் அவர் மீண்டும் அரசுடன் இணைந்து கொள்ளமாட்டார். மேலும் நல்லவர்கள் அனைவரும் சென்றுவிட்டால் கட்சியில் ஹெரோயின் காரர்கள், எத்தனோல் வர்த்தகர்கள், கொள்ளையர்கள், மோசடி வர்த்தகர்கள் மாத்திரமே எஞ்சியிருப்பார்கள் என்று ஆளும் கட்சியின். மேல் மாகாணசபை உறுப்பினரும், படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் புதல்வியுமான ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்திருந்துள்ளமை இன்றைய அரசியல் சூழ்நிலையில் முக்கியத்துவம் பெறுகின்றது. கடந்த மேல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட ஹிருணிகா அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் அவரது ஆதரவு எவருக்குக் கிடைக்கப் போகின்றது என்பதும் தெரிகின்றது.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரங்கள் நீதிமன்றங்களையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன. இதனால் நீதித்துறையின் சுயாதீனம் கேள்விக்குறியாக மாறியுள்ளது. ஒரே குற்றச்சாட்டின் கீழ் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் தமது குடும்பங்களுடன் மகிழ்ச்சியாக இருக்க, இலங்கையைச் சேர்ந்த தமிழ் மீனவர்கள் சிறைச்சாலைக்குள் தூக்குக் கயிற்றை எண்ணித் தூக்கத்தைத் தொலைத்து நிற்கின்றனர். இது எந்த வகையில் நியாயமானது என்பதைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகளின் செல்வாக்கும் இதன் மூலமாகத் தெரியவருகின்றது. அவர்கள் இனி மேலும் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து எதைச் சாதிக்கப் போகின்றனர் என்பது தெரியவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மைத்திரிபால சிறிசேன சவால் விடுவாரென்பதை அவருக்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கும் தமிழ் – முஸ்லிம் கட்சிகள் சிறிதும் எதிர்பார்க்க வில்லை. ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்தே எதிர்ப்பு வருமென இவை எதிர்பார்த்துக் காத்திருந்தன. தற்போது மதிலின் மீது ஏறி நிற்கும் பூனையின் நிலையில் இவை காணப்படுகின்றன.

மலையகத்தைப் பொறுத்தளவில் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி எதனையும் மஹிந்தரின் ஆட்சி ஏற்படுத்திவிடவில்லை. ஏற்படுத்திவிட்டிருந்தால் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் குடும்பங்கள் இன்னமும் ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்ட லயன் வீடுகளில் வேதனைகளையும், இன்னல்களையும் சுமந்தவாறு வாழ்ந்து கொண்டிருக்கமாட்டார்கள். அந்த மக்களின் தலைவர்களெனத் தம்மைக் கூறிக் கொள்பவர்கள் தலைநகர் கொழும்பில் சொகுசு வாழ்க்கை வாழ இந்த மக்கள் இன்னமும் மீளாத நரகத்தில் உழன்று கொண்டிருக்கின்றனர். ஆளும் தரப்புடன் பேரம் பேசுவதன் மூலமாகத் தமது மக்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்குத் திராணியில்லாத தலைவர்கள் எனக் கூறிக் கொள்பவர்கள் தமது வசதி வாய்ப்புக்களைப் பெருக்குவதில் மட்டுமே நேரத்தைக் கலரத்து வருகின்றனர். இந்த நிலையில் தான் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தருக்கே தமது ஆதரவென ஏற்கனவே அறிவித்ததன் மூலமாகத் தமது அரசியல் விவேகத்தை இவர்கள் வெளிக்காட்டிவிட்டனர். மைத்திரிபால சிறிசேன மஹிந்தருக்கு எதிராகக் களம் இறக்குவாரென்பதை இவர்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. தற்போது கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றனர். இவர்கள் மக்களின் நன்மைகளைக் கருத்தில் கொள்வார்களாயின் எவருடனும் பேரம் பேசுவதன் மூலமாக அவற்றை அமைத்து கொள்ள முடியும். ஆனால் அவர்கள் அவ்வாறு நடந்து கொள்வதில்லை. ஆனால் மலையக மக்களின் வாக்குகள் சிதறுண்டு போகப் போவதை எவராலும் தடுக்க முடியாது.

மேலும் முஸ்லிம் மக்களும், இலங்கையில் பூர்வீகமாக வசிக்கும் தமிழ் மக்களும் தமக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை எளிதில் மறந்து விடப் போவதில்லை. ஆகையால் இவர்களும் ஒரு தீர்க்கமான முடிவை இந்தத் தேர்தலில் எடுக்கப் போகின்றமை தெளிவாகத் தெரிகின்றது.

ஆனால் பெரும்பான்மையின மக்கள்தான் அதிகளவில் குழப்பத்தில் ஆழ்ந்து நிற்கின்றனர். அதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவுண்டுள்ள நிலையில் அதன் ஆதரவாளர்கள் தீர்க்கமான முடிவொன்றைஎட்டுவதில் தயக்கம் காட்டி வருகின்றனர். தேர்தல் நாள் நெருங்க நெருங்க இவர்களின் மனக் குழப்பம் அதிகரிக்கவே செய்யும்.

சவால் விடுக்க முடியாத மனிதர் என்ற தோற்றப்பாட்டுடன் காணப்பட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போது வெற்றியை உறுதி செய்வதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்வதைக் காணமுடிகின்றது. எப்பாடுபட்டாவது வெற்றிக் கனியைப் பறித்தே தீர வேண்டுமென்பதால் அவர் தமது அந்தஸ்தையும் மறந்து செயற்படுவதும் தெரிகின்றது. வீதியைத் திறந்து வைப்பதிலும், வீடுகளைக் கையளிப்பதிலும் அவர் தாமே ஈடுபட்டு மக்களின் ஆதரவைத் திரட்ட வேண்டியதொரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். தமது எதிராளியின் பலத்தை அவர் மதிப்பிட்டு வைத்துள்ளதால் முன்னைய காலங்களைப் போன்று தமது வெற்றி எளிதாக அமைந்துவிடாது என்பதையும் அவர் புரிந்து கொண்டுள்ளார்.

அரசியலில் எதுவும் நடக்கலாம். ஆகவே இலங்கையைப் பொறுத்தளவிலும் மாற்றங்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஆனால் சிறுபான்மையின மக்களே இதற்கான அத்திபாரத்தை இடப்போகின்றனர். இதற்கு ஏதுவாக எதிரணியினர் நடந்து கொள்வதைப் பொறுத்துத் தான் முடிவுகள் அமையுமென்பதில் ஐயமில்லை. ஆனால் சிங்கள பௌத்தத்தைக் கையில் தூக்கிப் பிடித்துக்கொண்டு தேர்தல் மேடைகளில் இனவாதம் கக்கப்படுமாயின் சிறுபான்மை மக்களின் ஆதரவை முழுஅளவில் பெற்றுவிட முடியாது. குறிப்பாக சஜித் பிரேமதாஸ போன்றவர்கள் இதில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும்.

மேலும் இந்த முழுநாட்டுக்குமே சாபக்கேடாக அமைந்துள்ள நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படுமாயின் அதுவே இந்த நாட்டைச் சூழ்ந்துள்ள இருளைப் போக்கிவிடும். ஜனநாயகம் என்று கூறிக் கொண்டு ஒரு சில அதிகாரம் படைத்தவர்கள் புரிந்து வரும் அட்டூழியங்களுக்கும், ஊழல் மோசடிகளுக்கும் இதன்மூலமாக முடிவு கட்டிவிடலாம்.

ஆனால் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறியது போன்று எவர் ஆட்சிக்கு வந்தாலும் சிறுபான்மையினரின் பிரச்சினைகள் தீர்ந்துவிடப்போவதில்லை. ஏனென்றால் அதற்கான வாய்ப்பை இனவாதிகள் வழங்குவார்களென நாம் எண்ணுவது பகல் கனவாகவேமுடியும்.

எனவே ஆட்சி மாற்றத்தை வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறொரு அதிசயமும் சிறுபான்மையின மக்களுக்குக் கிடைத்துவிட முடியாது. அவர்களின் தலைவிதி தொடர்கதையாகவே நீடிக்கப் போகின்றது என்பதை இப்போதே அறுதியிட்டுக் கூறிவிட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடிவுக்காக ஏங்கி நிற்கும் பொம்மைவெளி மக்கள்

வந்தியத்தேவர்

பொம்மைவெளியில் உள்ள குடும்பங்கள் தமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கி விட்டன. இதன் முதல்கட்டமாக தாங்கள் வசிக்கும் காணிகளுக்கான உறுதிகளைத் தரும்படி கேட்டு கடந்த 29ஆம் திகதி சனிக்கிழமை கொட்டும் மழைக்கு மத்தியில் வீதி மறியல் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர். கடந்த 18 வருடங்களாகத் தாம் வசிக்கும் காணியில் இருந்து தம்மை வெளியேற வேண்டும் என அரச அதிகாரிகள் நிர்ப்பந்தப்படுத்துவதாகவும், தமக்குரிய அவசிய தேவைகள் குறித்து அவர்கள் அக்கறை செலுத்துவதில்லை என்பதும் அவர்களது முறைப்பாடாகும்.


முதலில் காணி உறுதிக்காக நாங்கள் அதிகாரிகளிடம் எத்தனையோ தடவைகள் அலைந்தோம். எம்மிடம் இருந்து வாக்குகளைப் பெறுவதற்காகத் தேர்தல் காலத்தில் வரும் அரசியல்வாதிகள் பின்னர் எங்களைத் திரும்பியும் பார்ப்பதில்லை என்று கூறும் அங்கு வசிக்கும் அ.உதயமலர்; நாங்கள் சோலைவரி, மின்சாரக் கட்டணம் அனைத்தையும் செலுத்துகிறோம். தண்ணீருக்காக ரூபா 60 செலுத்துகின்றோம். ஆயினும் ஒழுங்காகத் தண்ணீரைப் பெறமுடியவில்லை. காலையில் ஒரு மணி நேரமும் பிற்பகல் ஒரு மணிநேரமும் மட்டும் தண்ணீர் எடுக்க முடியும். இங்கேயுள்ள அத்தனை குடும்பங்களும் குடி தண்ணீருக்காகக் கஷ்டப்பட வேண்டியுள்ளது– என்றார்.

மழை பெய்தால் இருக்க முடியாது. எமது குடிசைகளுக்குள் வெள்ளம் நிறைந்து வருகிறது. வெளியிடங்களில் இருந்து கொண்டு வரும் மண்ணைக் காக்கை தீவில் கொட்டுகிறார்கள். பள்ள நிலங்களான எமது குடியிருப்புப்பகுதிகளில்கொட்டினால் அவற்றைப் பரவிக் கொள்ள முடியும். அப்படிச் செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்களுக்கு இஷ்டமில்லை. நாங்கள் மழை வெள்ளத்தில் எமது குழந்தைகளுடன் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்க வேண்டியுள்ளது. நாங்களும் மனிதர்கள்தானே, கொஞ்சம் திரும்பிப் பார்க்கக் கூடாதா என்பது ரி.கரனின் ஆதங்கம். மழை நீர் வெளியேற முடியாதுள்ளது. அதை வெளியேற்றக் கூடியதாக ஏற்பாடு செய்து தர வேண்டும் என்கிறார்–அவர்.

மழை வெள்ளத்தில் பெரும்பாலான வீடுகள் மூழ்கியுள்ளன. பள்ளமான நிலம் என்பதால் ஒழுங்கைகளும் நீர் நிறைந்து காணப்படுகின்றன. வீடுகளில் புகுந்த மழை நீரை அகற்ற நீரிறைக்கும் இயந்திரங்களின் உதவியுடன் வீட்டு உரிமையாளர்கள் நீண்டநேரம் முயற்சி செய்து வருகின்றனர். வீடுகள் சேறும் சகதியுமாக உள்ளதால் சமைக்கவோ அல்லது நிம்மதியாக உட்காரவோ முடியாத நிலை காணப்படுகிறது. நீங்கள் வெள்ளத்தில் இறங்கி நிலைமைகளை அவதானிக்கிறீர்கள். அதிகாரிகள் அல்லது அரசியல்வாதிகள் வந்தாலோ தெருவில் நின்றபடியே மேலோட்டமாகப் பார்த்துவிட்டுத் திரும்பி விடுவார்கள். ஏதாவது ஒரு பிரச்சினை என்று அதிகாரத்தில் உள்ளவர்கள் யாராவது வந்தால் இப்படித்தான் நடக்கிறது என்ற வேதனை அந்த மக்களின் மனங்களில் இருந்து வெளிப்படுவதைக் காணமுடிகின்றது. மழை வெள்ளத்தில் மிதக்கும் குடிசைகளை இங்கு நிறையவே காணலாம்.

நாங்கள் 1983ஆம் ஆண்டு தொடக்கம் இந்தப் பகுதியின் கரையோரப் பகுதியில் குடியிருந்தோம். இடம்பெயர்ந்து மீள வந்தபோது எமது பகுதிக்குள் இராணுவ முகாம் காணப்பட்டது. அந்தக் காணிகள் அரச காணிகளாகக் காணப்படுகின்றன. அதில் குடியிருப்பதற்கு எம்மை அனுமதிக்கலாம்.

உணவு, உடைகளைத் தாருங்கள் என்றுகூட நாங்கள் கேட்கவில்லை. இந்த மழை வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கும் எங்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம்கூட எவருக்கும் ஏற்படவில்லை. நாங்கள் நிம்மதியாக வாழக்கூடியதாகக் காணி உறுதிகளை வழங்குங்கள் என்று தானே கேட்கிறோம். இதற்காகப் போராடியே தீருவோம் என்கிறார் வயது முதிர்ந்த கி.சுப்பிரமணியம்.




தமது குடியிருப்பு தொடர்பான பிரச்சினைக்கு நியாயமான தீர்வு தேவை எனக் கூறும் மக்கள் அதற்காக எதனையும் சந்திக்கக் தயார் என்று உறுதி பூண்டுள்ளதை வீதிப் போராட்டத்தின் மூல மாகத் தெரிந்து கொள்ளக் கூடிய தாக இருந்தது. நான்கு வயதுக் குழந்தைகூட இந்தக்கிராமத்தைக் கவனிக்க ஆள்கள் இல்லையா? என்ற பதாகையைத் தாங்கியபடி வீதி மறியல் களத்தில் இறங்கியிருந்தமை இந்த மக்களின் கோரிக் கைகளுக்கு அரசியல்வாதிகளோ ஏனைய அதிகாரிகளோ ஒரு தீர்வை விரைந்து பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தது.

இந்தப் பகுதியில் தற்போது குடியிருக்கும் மக்களின் காணிகள் தனியாருக்குச் சொந்தமானவை. அந்தக் காணிகளுக்கு இவர்கள் கேட்பதற்காகத் திடீரென உறுதிகளை அதிகாரிகள் வழங்க முடியாதென்பது உண்மை. எனினும் நீண்டகாலமாக இங்கே குடியிருக்கும் மக்களுக்காக ஏதாவது ஒரு நீதியான தீர்வைக் காண முன்வரவேண்டியது மனிதாபிமான நடவடிக் கையாகும்.



நாங்கள் 1983ஆம் ஆண்டு தொடக்கம் இந்தப் பகுதியின் கரையோரப் பகுதியில் குடியிருந்தோம். இடம்பெயர்ந்து மீள வந்தபோது எமது பகுதிக்கும் இராணுவ முகாம் காணப்பட்டது. அந்தக் காணிகள் அரச காணிகளாகக் காணப்படுகின்றன. அதில் குடியிருப்பதற்கு எம்மை அனுமதிக்கலாம். உணவு, உடைகளைத் தாருங்கள் என்றுகூட நாங்கள் கேட்கவில்லை. இந்த மழை வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கும் எங்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம்கூட எவருக்கும் ஏற்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்



# வாசகர் திருமுகம்

## அரச பஸ்சேவை இடம்பெறுமா?

768 இலக்க அரச பஸ் சேவை மிக குறைவாக இருப்பதால் வேலைக்குச் செல்பவர்கள் மினிபஸ்களில் மிகுந்த நெருக்கடிக்கு மத்தியில் பிரயாணம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறார்கள். காலையில் 6.45 மணிக்கு கந்தரோடை பஸ் நிலையத்துக்கு வரும் பாடசாலை பஸ் சில சமயம் வராவிட்டால் மினி பஸ்ஸில் ஏறமுடியாத நிலையே, அங்கு பஸ்ஸுக்குக் காத்திருப்பவர்களுக்கு ஏற்படுகின்றது. முன்பு மாலை 4 மணி, 5.30 மணி, 6.30 மணிக்கு சேவையில் ஈடுபட்ட அரச பஸ்சேவை இப்போது இல்லை. மாலை நேரங்களில் வேலை முடிந்து சனநெருக்கடி மத்தியில் பயணிக்கும்போது இறங்க வேண்டிய பஸ் நிலையம் கூடத் தெரியாத அளவுக்கு பெரும் சத்தத்துடன் போடும் பாடல்களால் இடையூறு ஏற்படுகின்றது. அரச பஸ் சேவைகள் முன்னர் போன்று மாலை வேளைகளில் சேவையில் ஈடுபட்டால் வேலைக்குச் சென்று வீடு திரும்புபர்களுக்கு மிகுந்த உதவியாக இருக்கும் என்பதைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*ரி.தம்பிராசா, அளவெட்டி*

## உரிய திகதியில் ஓய்வூதியம்

குறிப்பிட்ட திகதியில் ஓய்வூதியம் பெறக்கூடியதாக ஓய்வூதியர்களின் வங்கிக் கணக்குகளுக்குப் பிரதேச செயலகத்தால் பணம் வைப்பிலிடப்படும் என பத்திரிகைச் செய்தி தெரிவிக்கின்றது.

ஆனால் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தால் இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றுக்கு மாத்திரம் பணம் உரிய வேளையில் அனுப்பப்படுகின்றது.

ஏனைய வங்கிகளுக்கு உரிய நேரத்தில் அனுப்பப்படுவதாகத் தெரியவில்லை. ஓய்வூதியர்கள் பிற்பகல் 3 மணிவரை காத்திருந்து வெறுங் கையுடன் திரும்புகின்றனர்.

ஓய்வூதியர்கள் அனைவரும் ஒரே திகதியில் தமது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்குமா? இல்லையேல் இவர்களுக்கு முன்னரைப்போன்று உறுதிச் சீட்டுகள் அனுப்பி வைக்கப்படவேண்டும்.


*பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்*

## பழைய படகுகள் அகலுமா?

நீண்டகாலமாக நயினாதீவுக்கும்குறிகாட்டுவானுக்கும்இடையிலானபோக்குவரத்துச் சேவை படகுகள் மூலம் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. இதனை யாவரும் அறிந்ததே. ஆனால்தற்போதுமிகவும்பழைமை வாய்ந்த பழுதடைந்த பல படகுகள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே மக்கள் மீது அக்கறை கொண்டுள்ளவர்கள் மக்களுக்கு ஏதும் அசம்பாவிதம் நடக்கும் முன்பே கூடிய கவனம் செலுத்தி தகுதி வாய்ந்த படகுகளைச் சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

*யாழ்.மைந்தன்.*

கருத்துச் சித்திரம்



## ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்

காணி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் நேற்று பொது மேடையில் மக்கள் முன்பாக கண்ணீர் விட்டழுதுள்ளார். அரசியல் மேடையில், பொதுமக்கள் முன்னிலையில் அவரால், அவரது கண்ணீரை கட்டுப்படுத்த முடியவில்லை. அடக்கிப் பார்த்தார். ஆனால் முடியவில்லை. கடைசியில் இரண்டு நிமிடங்கள் கண்ணீர் விட்டழுதார்.

அவர் அழுவதைப் பார்க்கும் போது எங்களுக்கும் அழுகை வருகின்றது. ஆனாலும் அதற்கும் மேலாக ஒரு ஆனந்தச் சிரிப்பு அந்த அழுகையை மறைத்து விடுகின்றது. காணி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், ஜனாதிபதி மஹிந்த தான் சொன்னதைக் கேட்கவில்லை என்று சொல்லி அழுதார்;.

தனது தந்தையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தவர். எவ்வளவு பிரச்சினைகள் வந்த போதும் அவர் கட்சியை விட்டுச் செல்லவில்லை என்று சொல்லி அமைச்சர் அழுதார். மறைமுகமாக தான் வெளியேறப் போவதைச் சொல்லிக் காட்டினார். ஆனால் அது எங்களுக்கு முக்கியமில்லை.

உங்களால் நாங்கள் இங்கு அழுதோம். அப்போது எங்கள் அழுகை உங்களுக்கு கேட்கவில்லை. நீங்கள் சிரித்து கூத்தடித்துக் கொண்டிருந்தீர்கள். எங்கள் அழுகைகளும் – முனகல்களும் எங்கே உங்களுக்கு கேட்டிருக்கப் போகின்றது.

கடந்த 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த காணி அமைச்சர், இங்கு காணி சுவீகரிப்பு அலுவலகத்தை திறந்து வைத்தார். வடக்கில் நிலை கொண்டுள்ள படையினர் மக்களின் காணிகளை கையகப்படுத்துவதற்கான அலுவலகத்தை திறந்து வைத்தார்.

அத்துடன் காணி சுவீகரிப்பை விரைவுபடுத்துமாறு தமிழ் பிரதேச செயலாளர்களுக்கு அதிகாரத் தொனியுடன் கட்டளையிட்டிருந்தார். அதன் போது காணி அமைச்சருடன் கூட இருந்தவர் முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க.

இதனால், மக்கள் போகவே முடியாத உயர் பாதுகாப்பு வலயமாக வலி.வடக்குப் பிரகடனப்படுத்தப்பட்டு சுவீகரிப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டது. இதே போன்று பல்வேறு காணிகளும் சுவீகரிப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டு இராணுவத்துக்கு தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டது. அதன் காரணகர்தாதான் இந்தக் காணி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன்.

பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மண்ணை உங்கள் அதிகாரத்தைக் கொண்டு ஏப்பம் விட்டீர்களே. அப்போது நாங்கள் எப்படிக் கத்தி அழுதோம். அந்த அழுகை உங்களுக்கு தெரிந்திருக்காது.

வலி.வடக்கு மக்கள் எத்தனை தடைகளையும் மீறி காணி வேண்டும் என்பதற்காக ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தார்கள். நீங்கள் எதற்காவது மசிந்து கொடுத்தீர்களா ?

தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்பாக நடந்த ஆர்ப்பாட்டத்தில், தாயொருவர் மண்ணைத் தூவி சாபமிட்டது உங்களுக்கு நினைவிருக்கின்றதா ? உங்களுக்கு எப்படி நினைவிருக்கும். அந்தச் சாபங்கள் இப்போதுதான் பலிக்கத் தொடங்கியிருக்கின்றது.

அமைச்சரே, நீங்கள் இப்போது கண்ணீர் விட்டழுதது உங்கள் பதவிக்காக, கட்சிக்காக, கட்சியின் எதிர்காலத்திற்காக. நாங்கள் கண்ணீர் விட்டழுதது எங்கள் வாழ்க்கைக்காக. வாழ்வின் பிழைப்புக்காக, எங்கள் உடம்பு அடங்குவதற்கு ஆறடி நிலம் வேண்டும் என்பதற்காகத்தான். அழுது கொண்டிருக்கின்றோம். எங்கள் கண்ணீர் இன்னமும் நின்றபாடில்லை.

அமைச்சரே, உங்கள் தந்தை பரம்பரையாக இருந்த கட்சியில் நடக்கும் அநியாயங்களைப் பார்க்கும் போது கண்ணீர் வருகின்றதா ? எங்களுக்கும் கண்ணீர் வருகின்றது. எங்கள் முப்பாட்டன், அப்பு, ஆச்சி வாழ்ந்த மண்ணில், நாங்கள் விவசாயம் செய்ய வேண்டிய பூமியில், உங்களவர்கள் விவசாயம் செய்யும் போதும், அதனை எங்களுக்கே கொண்டு வந்து தரும் போதும் கண்ணீர் வருகின்றது.

எங்களிடமிருந்து நீங்கள்தானே காணியைப் பறித்துக் கொடுத்தீர்கள்.

எங்களிடம் இருப்பது கண்ணீர் ஒன்றுதான். ஆனால் அந்தக் கண்ணீருக்கும் பலம் இருக்கத்தான் செய்கின்றது. அதிகார மமதையில், ஆட்சிப் பலம் தன்னிடம் இருந்ததால் ஈவு இரகமற்ற போரை நடத்தியவர் பொன்சேகா. எங்கள் பிள்ளைகளை, காணாமற் போகச் செய்தவர்கள், அவரின் காலத்தில்தான் இருந்தார்கள். அதற்காக நாங்கள் விட்ட கண்ணீர் இறுதியில், பொன்சேகாவின் மனைவியையும் விடச் செய்தது. அதை அவ்வளவு சீக்கிரத்தில் யாரும் மறந்து விட முடியாது.

இப்போது நாங்கள் எங்கள் தாய் மண்ணுக்காக, அதைக் கபளீகரம் செய்ய நீங்கள் எடுத்த நடவடிக்கைக்காக தினம் தினம் கண்ணீர் விட்டழுகின்றோம். அந்தக் கண்ணீர்தான் இன்று உங்களையும் கண்ணீர் விட வைத்திருக்கின்றது.

அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என்று மூத்தோர்கள் சொல்வார்கள். இப்போது தெய்வமும் அன்றே கொல்லத் தொடங்கி விட்டது. அமைச்சரே இதை உங்கள் கூட்டாளிகளிடம் சொல்லி வையுங்கள். அவர்கள் சில வேளைகளில் சிறைக் கம்பிகளின் பின்னால் நின்று கண்ணீர் விட வேண்டி வரும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்








## தெரியுமா உங்களுக்கு?

- ஆபிரிக்க பறவை இனங்களில் ஒன்றின் பெயர் விதவை.
- 'புபு' என்றால் திபெத்திய மொழியில் வியாழக்கிழமை என்று அர்த்தம்.
- சூரியனின் கொள்ளளவு எத்தனை பூமிகளுக்கு சமம்? அதாவது, சூரியனுக்குள் எத்தனை பூமிகளை வைக்கலாம் தெரியுமா? 10 லட்சம் பூமிகள்!
- எவரெஸ்டின் இப்போதைய உயரம் 29,028 அடி.
- விளக்கு வெளிச்சத்தில் அடை காக்கும் கோழிகள் முட்டைகளை சீக்கிரம் பொரிக்கின்றனவாம். இதுபோல இனிய இசைகளைக் கேட்கும் கோழிகள் அதிக முட்டைகளை இடுகின்றனவாம்.
- மனித முடியை தீயினால் மட்டுமே அழிக்க முடியும். வேறு வழிகளில் அழிப்பது என்பது அவ்வளவு எளிதான காரியம் இல்லை.
- மனிதனின் இதயம் ஒரு நிமிடத்துக்கு 70 முறை துடிக்கிறது. ஆனால், மிகப் பெரிய உருவங்கொண்ட யானையின் இதயத்துடிப்பு ஒரு நிமிடத்துக்கு 27 முறை தான்.



சாந்தன் யதுசாந்தன்,
தரம்– 3 'ஏ'.

## பொது அறிவு

1) உலகிலேயே அதிக மழை பெறும் இடம் யாது?
சீராப்புஞ்சி
2) உலகிலேயே பெரிய நன்னீர் ஏரி யாது? சுப்பீரியர் ஏரி
3) சூரியனை பூமி ஒருமுறை சுற்றிவர எடுக்கும் காலம் யாது? 365 நாள்கள்.6 மணி 9நிமிடம். 9.54 செக்கன்
4) உலகிலேயே மிகவு உயர்ந்த சிகரம் யாது?
எவரெஸ்ட்
5) உலகிலேயே பெரிய எரிமலை யாது?
லஸ்கார்(சிலி) 5.990மீ.
6) உலகிலேயே மிக நீளமான மலை எது?
அந்தீஸ்மலை



நா.கஜனி, தரம்– 5


**Personal Class**

A/L **கணக்கீடு**
தனியாகவும், குழுவாகவும் தமிழ்மொழி மூலமாகவும் ஆங்கிலமொழி மூலமாகவும் கற்பிக்கப்படும்
S.S.**பிரதீபன்**
(54479) (45.3.6) தொடர்பு: 077 616 9824

**விசேட மலிவு விற்பனை**

எதிர்வரும் கிறிஸ்மஸ் புதுவருடத்தை முன்னிட்டு அனைத்து துணி வகைகளும், பாடசாலை சீருடை துணிகளுக்கும் விசேட - விலை கழிவு வழங்கப்படுகிறது.
01.12.2014 - 31.12.2014
லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம் முன்) யாழ்ப்பாணம்.
(சி.17923) (45.3)

**விற்பனைக்கு**

தச்சுவேலை மற்றும் சிற்ப வேலைகளுக்கு உகந்த இத்தாலி மெசின் 400 மொடல் வவுனியாவில் விற்பனைக்கு உண்டு.
(53267) (12.3.6) தொடர்பு: 077 037 5262

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்



விஜய், சமந்தா நடிப்பில்
**கத்தி**
(தினசரி 4 காட்சிகள்)
10.30,2.30,6.30, 9.30
எமது செல்லா சினி திரையரங்கில் உங்களது விளம்பரங்களை காட்சிப்படுத்த அழையுங்கள்
077 326 6949

இந்தியா செல்லும் ஐயப்பன் அடியவர்களுக்கு விசேட விலைக் கழிவு.
0777721235
❄ AIR TICKETS FOR ALL COUNTRIES
❄ HOLIDAY PACKAGES
IATA
18 YEARS
**AIR MARK**
Travels & Tours
#212, PALALY ROAD, JAFFNA. 0212224777

**அன்பொளி கல்வியகம்**

யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை மைதான வீதி, யாழ்ப்பாணம்.
2015 இல் தரம் 2,3,4
மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தரம் 4 - 30.11.2014 இல் ஆரம்பம்
தரம் 2,3 - 07.12.2014இல் ஆரம்பம்
அனுமதிகளை உடன் பெற்றுக்கொள்ளவும்
சின்னவிழி அசைத்து சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.
இயக்குநர்

**யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச்சங்கம் (வ/து)**
**ஆண்டுப்பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும்-2014**

காலம்: 28.12.2014 ஞாயிற்றுக்கிழமை
இடம்: கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
தலைமை: செ.ஜெயக்குமார் அவர்கள் (சங்கத்தலைவர்)
மேற்படி சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 28.12.2014 அன்று நடத்த தீர்மானித்திருப்பதனால் அங்கத்தவர் பிரேரணைகள் இருப்பின் தங்கள் பிரேரணைகளை 14.12.2014 இற்கு முன்னதாக சங்கச் செயலாளருக்கு அனுப்பி வைக்கவும். அத்துடன் எமது அங்கத்தவர்களின் பிள்ளைகள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி மற்றும் பல்கலைக்கழக அனுமதி -2014 (2012 க.பொ.த.உயர்தரம் தோற்றியோர்) பெற்றிருப்பின் அவர்களின் விவரங்களை உறுதிப்படுத்தி 14.12.2014 இற்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(சி/17931) (4.6.3)
செயலாளர்,
க.செல்வச்சந்திரன்.

**வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை.**
வடமாகாணத்தின் பொதிகள் சேவை துறையின் முன்னோடிகள்



- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- ஆகாய, கடல் மார்க்கமாக
- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
- வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்
- 3-4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் குறித்த முகவரியில் ஒப்படைக்கின்றோம்.

இன்று நேற்று அல்ல 15 வருட அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

**அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்** இல.1, பிரவுண் வீதி, நாவலர் வீதிச்சந்தி, யாழ்ப்பாணம். Tel: 021 222 6113


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள்

# மைத்திரிபால மீது நம்பிக்கை இல்லை

## ஜே.வி.பி. கூறுகின்றது

கொழும்பு, டிசெ.1
மைத்திபால சிறிசேன ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பார் என்பதில் நூறுசதவீதமான நம்பிக்கை எமக்கு இல்லை என்று கூறியுள்ளது ஜே.வி.பி.
அந்தக் கட்சியின் பரப்புரைச் செயலாளர் விஜித ஹேரத்தே இவ்வாறு கூறியுள்ளார். தனியார் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றின் விவாத நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், முன்னர்



இவ்வாறு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் மீறப்பட்டமையைச் சுட்டிக்காட்டினார்.
அவற்றைஅனுபவமாகக்கொண்டு மைத்திரிபாலவை ஏற்றுக்கொள்வதில் ஜே.வி.பி. விலகி நிற்கின்றது என்றும் அவர் கூறினார்.
ஆயினும், ஜே.வி.பியின் இந்த நிலைப்பாடு குறித்துக் கருத்துத் தெரிவித்திருந்த விமல் வீரவன்ஸ, மக்கள் மத்தியில் அவர்கள் செல்வாக்கை இழந்துள்ளனர். அப்படியான நிலையில் மக்களிடம் பொறுப்புக் கூறமுடியாத ஜே.வி.பி. தேர்தலில் வேட்பாளரை நிறுத்தவில்லை என்று கூறியுள்ளார். (ற)

# சரத் என் சில்வா 'பல்டி!'

யாழ்ப்பாணம், டிசெ. 1
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் தேர்தலில் போட்டியிட வேட்பு மனுத் தாக்கல் செய்தால், அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போவதில்லை என்று, முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.
அரசமைப்பில் 18 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாகப் போட்டியிட முடியாது என்ற வாதத்தை முதலில் முன்வைத்தவர் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா. அவ்வாறு அவர் போட்டியிட்டால் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் கூறியிருந்தார்.
தற்போது கருத்து வெளியிட்டுள்ள சரத் என்.சில்வா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.
"உயர் நீதிமன்றத்தின் கருத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மூன்றாவது தடவையும் மஹிந்த ராஜபக்ஷவால், போட்டியிட முடியும் என்ற அதன் கருத்து சட்டவிரோதமானது. அதே நீதிமன்றத்திடம் முறையீடு செய்து பயனில்லை என்று உணர்கிறேன்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
கடந்த வியாழன் மற்றும் வெள்ளி இரு நாள்களும், காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயத்தினுள்ள கடற்படை இல்லத்தில் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவும் அவரது நண்பரும் தங்கியிருந்தனர். இங்கு ஜனாதிபதி மற்றும் உயர் அதிகாரிகள் மாத்திரம்தான் தங்க முடியும். இருப்பினும், தான் அவ்வாறு காங்கேசன்துறை விடுதியில் தங்கவில்லை என்பதை முழுமையாக மறுத்துள்ளார் சரத் என்.சில்வா. (ற-5)

# சந்திரிகாவின் கும்பல் பிரிவினைவாதக் கும்பல்

கொழும்பு, டிசெ.1
சந்திரிகா கும்பல் பிரிவினைவாதிகளின் கும்பல் என்று கூறியுள்ள அமைச்சர் விமல் வீரவன்ஸ, அவர்கள் கடந்த நாள்களில் வெளியிட்டுவரும் கருத்துக்கள் நாட்டைத் துண்டாடும் நோக்கத்தைத் தெளிவுபடுத்தியுள்ளது என்றும் சாடியுள்ளார்.
மாலபேயில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த போட்டியிட்ட போது அவரது காலைப் பிடித்திழுத்த சந்திரிகா, இன்று அதே வேலையைச் செய்கின்றார்.
சந்திரிக்கா காலைப் பிடித்திழுக்க, ஐ.தே.க. பல தரப்புடன் இணைந்து சதித்திட்டங்களை மேற்கொண்டது. ஆயினும் மஹிந்த 90 ஆயிரம் மேலதிகவாக்குகளால் வெற்றி பெற்றார். அவர் வெற்றி பெற்றிருக்காவிட்டால் நாடு இரண்டு பட்டிருக்கும். சந்திரிகா சுனாமி நிவாரண கட்டமைப்பு நிதியை புலிகளுக்கு வழங் கவிருந்தார். நாம் நீதிமன்றம் சென்று அதனைத் தடுத்து நிறுத் தினோம் என்றும் அவர் அங்கு கூறியுள்ளார். (ற)

# புளொட்டுடன் இல்லை டொமினிக் அன்ரன்

## கட்சியின் தலைவர் சித்தார்த்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.01
பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் தவிசாளர் டொமினிக் அன்ரனுக்கும் புளொட் அமைப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அந்தக் கட்சியின் தலைவர் த.சித்தார்த்தன் அறிவித்துள்ளார்.
எங்களுடைய கட்சியின் ஒரு தீவிர ஆதரவாளராக செயற்பட்டு வந்தவர் டொமினிக் அன்ரன். எங்களுடைய கட்சிக்கும் அவருடைய செயற்பாடுகளுக்கும், அவர் தனது பதவியிலிருந்து விலக மறுத்த காலம் தொட்டு எந்தவித சம்பந்தமும் இல்லாமல் இருந்தது. ஆகவே, அவருடைய செயற்பாடுகளுக்கும், எமது கட்சிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லையென்பதை மக்களுக்கு அறியத்தருகின்றாம் – என்று அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி சின்னத்தில் டொமினிக் அன்ரன் போட்டியிட்டிருந்தார். அந்தத் தேர்தலில் கூட்டமைப்பால் முதலில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. இதனையடுத்து அவசர அவசரமாக, கூட்டணியின் சின்னத்தில் வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டனர்.
இவ்வாறு களமிறக்கப்பட்ட வேட்பாளர்கள் ஒரு வருடத்துள் தமது பதவிகளில் இருந்து விலக வேண்டும். இந்தக் கொள்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே வேட்பாளர்கள் போட்டியிட அனுமதிக்கப்பட்டனர். ஆயினும் வெற்றிபெற்ற பின்னர் அவர்கள் பதவியில் இருந்து விலகவில்லை. அதையடுத்து பிரதேச சபையின் தவிசாளர் டொமினிக் அன்ரனை, கூட்டணி கட்சியிலிருந்து விலக்குவதாகத் தெரிவித்தது. அதை எதிர்த்து டொமினிக் அன்ரன் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். (ற-5)

# மஹிந்த மீண்டும் பதவிக்கு வந்தால் நிறைவேற்று அதிகாரத்தை கைவிடார்

## ஹரின் பெர்னாண்டோ கூறுகின்றார்

கொழும்பு, டிசெ.1
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வெற்றி வாய்ப்பை வழங்கினால், அடுத்த 8 ஆண்டுகளுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை அகற்ற முடியாது என்று தெரிவித்துள் [illegible] அந்தக் கட்சியைச் சேர்ந்த ஊவா மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஹரின் பெர்னாண்டோ இவ்வாறு கூறியுள்ளார்.
"அப்படியான சூழல் நடைபெறக் கூடாது என்பதில் மக்கள் உறுதியாக இருக்க வேண்டும். தாமே நாட்டைப் பாதுகாப்பவர் என்று ஜனாதிபதி கூறுகின்றார். ஆனால் அவரது கட்சியில் இருந்த பொதுச் செயலாளரே அதனை நிராகரிக்கின்றார். அவருக்கு எதிராகப் போட்டியிடுகின்றார்"– என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.
தனியார் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் நடந்த விவாத நிகழ்ச்சியிலேயே அவர் இவ்வாறு கூறினார். ஆயினும் குறித்த விவாதத்தில் அரச தரப்பினர் எவரும் சமுகமளிக்கவில்லை என்று தெரிவிக்கப் பட்டது.(ற)


**வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி**
**கோப்பாய் எரிபொருள் நிலையத்தின் கூடாரம் மற்றும் தளம் அமைத்தல்**

**மேற்படி நிலையத்தின் வேலைக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து கேள்வி விண்ணப்பம் கோரப்படுகிறது. விண்ணப்பங்களை தலைமைக் கந்தோரில் வேலை நாள்களில் பெற்றுக் கொள்ளலாம்.**
**விண்ணப்ப முடிவுதிகதி 15.12.2014 ஆகும்.**
**(25.11.2014 ஆம் திகதிய இயக்குநர்சபை கட்டளைப்படி)**
(C/17951) (4.3.6)
**பொதுமுகாமையாளர்,**
**வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.**



**மானிப்பாய் கோவில் பற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**லொறிகள் விற்பனைக்கான கூறுவிலை கோரல்**

மானிப்பாய் கோவில் பற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான இரண்டு லொறிகள் மூடிய கூறு விலைகள் கோரி விற்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி கேள்விமனுக்கள் 01.12.2014 ஆம் திகதி தொடக்கம் 17.12.2014 திகதி நண்பகல் 12.மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்

| **வாகன இலக்கம்** | **வாகன வகை** |
|---|---|
| 1)24 சிறி 1036 | Isuzu( விபத்துக்குள்ளானது) |
| 2)NP LC 9755 | Ashok Leyland |

- ❖ NP LC 9755 Ashok Leyland வாகனத்தை சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில் அலுவலக வேலை நாள்களில் காலை 9.00 மணி முதல் மாலை 3.30 மணிவரை பார்வையிட முடியும்.
- ❖ 24 சிறி 1036 Isuzu ( விபத்துக்குள்ளானது ) மேற்படி வாகனத்தை கடமைநாள்களில் காலை 9.00 தொடக்கம் மாலை 3.00 00 மணி வரை கோப்பாய் சந்தியில் உள்ள சற்குணம் கராஜில் பார்வையிட முடியும்.
- ❖ ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியாக கூறு விலைகளைக் குறிப்பிட்டு தெளிவாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வாகன விற்பனைக்கான கேள்வி கோரல்" எனக் குறிப்பிட்டு 17.12.2014 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு தபால் மூலம் **"தலைவர் மானிப்பாய் கோவில் பற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் பொன்னாலை வீதி மானிப்பாய்"** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- ❖ கிடைக்கபெற்ற கேள்வி மனுக்கள் 19.12.2014 அன்று மாலை 3.00 மணிக்கு சங்க இயக்குநர் சபையில் திறக்கப்பட்டு கூடிய விலை கோருபவருக்கு வாகனம் விற்கப்படும். பலர் ஒரே விலை கோரும் இடத்து திருவுளச்சீட்டு மூலம் தெரிவு இடம் பெறும். இயக்குநர் சபையின் முடிவே இறுதியானது ஆகும்.

**தலைவர்**
**மானிப்பாய் கோவில் பற்று**
**பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்**
**பொன்னாலை வீதி,**
**மானிப்பாய்**
**2014.12.01**
(சி/17960) (4.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரங்கள்


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்





Congratulation

| | | |
|---|---|---|
| பு.கோபிசன் 179 புள்ளி | ப.நிNனகா 161 புள்ளி | அ.சதுஸ்ரிபன் 156 புள்ளி |





Congratulation

| | | |
|---|---|---|
| வி.டினுசாந் 155 புள்ளி | சூ.சனுஜன் 151 புள்ளி | வி.சஸ்மிதா 150 புள்ளி |

தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் அவர்களை நல்ல முறையில் தயார்படுத்தி வழிநடத்திய ஆசிரியர்களையும் வழிகாட்டிய அதிபர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(54505)(4.3.6) பாடசாலைச்சமூகத்தினர்.


## மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ்வு நாளை

தென்மராட்சி, டிசெ.1

தென்மராட்சி கல்வி வலய விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மாற்றுவலுவுள்ளோர்தின விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கைதடி நவீல்ட் பாடசாலையில் இடம்பெறும். வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆரவீந்திரன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் கௌரவ விருந்தினராக கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் வீ.எஸ். மகேந்திரனும் கலந்துகொள்வார். (வ–9)


## பாராட்டி வாழ்த்து



தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அளவெட்டி வடக்கு அ.மி.த.க பாடசாலை மாணவி **ரவிச்சந்திரன் சரணிகா** அவர்களையும் மற்றும் 70 புள்ளிகளுக்கு மேல்பெற்ற மாணவ மாணவிகளையும் அவர்களைப் பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களையும் மனதார பாராட்டுகின்றோம்.

Congratulation

(சி/17947)(3.6.4) வாழ்த்துவோர்: பாடசாலைச்சமூகம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்




வலிகாமம் கல்வி வலயத்தால் 29.11.2014 அன்று நடைபெற்ற வலய சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வில் **சிறந்த அதிபர்** விருதைப் பெற்ற எமது பாடசாலை அதிபர்

**சின்னையா மனோகரன்**

அவர்களைப் பாராட்டுவதுடன் இவர் மேலும் பல விருதுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

Congratulation

(54520)(4.3.6) வாழ்த்துவோர்: பாடசாலைச்சமூகம்,
யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.



# யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

## புலமைப்பரிசில் பரீட்சை-2014

## சித்தி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்த மாணவச் செல்வங்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை யில் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 153 மாணவர் கள் தோற்றினர். இதில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுச் சித்தியடைந்த 74 மாணவர்களையும் (48.37%) 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 77 மாணவர் களையும் பாராட்டி வாழ்த்து வதுடன், இவர்களின் வெற்றிக் குத் தம்மை அர்ப்பணித்துச் சேவையாற்றிய அதிபர் பே.தன பாலசிங்கம், தரம் 5 இல் கற்பித்த ஆசிரியர்களான வே. அன்பழகன், செல்வி ஐ.வனஜமலர், திருமதி ச.தேவதாஸ், திருமதி ந.தயானந்தன், திருமதி நித்தியானந்தன், சி.சிவகாந்தி ஆகியோரினதும் தரம் 1 இலிருந்து தரம் 4 வரை கற்பித்த ஏனைய ஆசிரியர்களினதும் பணி என்றும் சிறப் புறவும் மற்றும் பல்வேறு வகையிலும் உதவி புரிந்த பாடசாலைச் சமூகத்தினர் அனைவரையும் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்து வதுடன், எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Congratulations

(சி/17945)(4.3.6)

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உலகச் செய்திகள்

# தீவிரவாதிகள் தாக்குதல் சீனாவில் 15 பேர் சாவு

பீஜிங், டிசெ.1

சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தில் பொது இடத்தில் புகுந்த தீவிரவாதிகள் வாளால் வெட்டியும், வெடிபொருள்களை வீசியும் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில், பொது மக்களில் 4 பேர் உயிரிழந்தனர். 14 பேர் படுகாயமடைந்தனர். பொலிஸார் பதில் தாக்குதல் நடத்தி 11 தீவிரவாதிகளையும் கொன்றனர்.

சீனாவின் ஜின்ஜியாங் மாகாணம் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர், ஆப்கனிஸ்தானை ஒட்டி அமைந்துள்ளது. அந்த மாகாணத்தைப் பிரித்துத் தனி நாடாக அறிவிக்கக் கோரி, உய்குர் பிரிவினர், கிழக்கு துருக்கிஸ்தான் தீவிரவாத அமைப்பை நடத்தி வருகின்றனர். அல்குவைதாவுடன் தொடர்பு கொண்ட இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் சமீபகாலமாக சீனாவில் பயங்கரவாதத்தை அரங்கேற்றி வருகின்றனர்.




கடந்த ஜூலை மாதம் சாசே நகரில் புகுந்த தீவிரவாதிகள் வாள் மற்றும் கோடரியால் சரமாரியாக வெட்டியதில் 37 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

இதில் பிடிபட்ட 27 தீவிரவாதிகளுக்கு சாவுத் தண்டனை விதித்து உள்ளூர் நீதிமன்றம் கடந்த மாதம் தீர்ப் பளித்தது.

இந்தநிலையில், நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி பி.ப. 1.30 மணிக்கு சாசே கவுன்டி நகரத்தின் பரபரப்பான பகுதியில் இரு சக்கர வாகனத்தில் வந்த தீவிரவாதிகள், வாள் மற்றும் வெடி பொருள்கலை கொண்டு தாக்குதல் நடத்தினர். இதில் பொது மக்களில் 4 பேர் உயிரிழந்தனர். 14 பேர் படுகாயமடைந்தனர்.

பொலிஸார் விரைந்து வந்து, பதில் தாக்குதல் நடத்தி 11 தீவிரவாதிகளையும் கொன்றதாக அந்நாட்டு அரசு செய்தி நிறுவனமான ஜின்ஹுவா தகவல் வெளியிட்டுள்ளது. சம்பவம் நடைபெற்ற பகுதியில் ஏராளமான வெடிபொருள்களும், வாள்களும், கோடரிகளும் மீட்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. (வ)



## கைவிடப்பட்டன முபாரக் மீதான குற்றச்சாட்டுகள்

கெய்ரோ, டிசெ.1

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி முபாரக் மீதான கொலை, ஊழல் குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டன

எகிப்தில் 2011ஆம் ஆண்டு அரபு வசந்த புரட்சியின்போது நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டது தொடர்பாக மறுவழக்கை எதிர் கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்குக்கு எதிரான அனைத்து குற்றச்சாட்டுகளும் தற்போது கைவிடப்பட்டுள்ளன.

முபாரக் வேறொரு வழக்கில் வழங்கப்பட்டிருந்த தண்டனைக்காக சில காலம் சிறையில் இருப்பார் என்று தெரிகிறது.

முபாரக் ஆட்சியின் மூத்த பாதுகாப்பு அதிகாரிகள் பலரும்கூட தற்போது நிரபராதி என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளனர். ஹோஸ்னி முபாரக் மீது குற்றம் உறுதிசெய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் வழக்கு நடத்தப்பட்டிருந்த முறையில் சில பிழைகள் இருப்பதால், மறு விசாரணை செய்யப்பட வேண்டும் என உத்தரவிடப் பட்டிருந்தது. முபாரக் மற்றும் அவர் மகனுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளும் கைவிடப்பட்டுள்ளன. இருந்தாலும் முபாரக் தற்போது விடுதலையாகவில்லை.

தனியாக நடந்த ஒரு சொத் துக் குவிப்பு வழக்கில் வழங்கப்பட்டிருந்த தண்டனைக்காக இன்னும் ஒரு சில மாதங்களாவது அவர் சிறையில் இருப்பார் என்று எதிர்பார்க் கப்படுகிறது. (வ)

## மரத்துக்கும் மனிதனுக்கும் நடைபெற்ற திருமணம்

பெரு நாட்டைச் சேர்ந்த நபர் ஒருவர் மரத்தை திருமணம் செய்து கொண்ட சம்பவம் ஆச் சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. குறித்த நாட்டைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் ரிச்சர்ட் டோரஸ் கொலம்பிய நாட்டின் பொகோடாவில் உள்ள தேசிய பூங்காவில் உள்ள மரம் ஒன்றை, தனது நண்பர்கள் கூட்டத்துடன் சென்று திருமணம் செய்து கொண்டார்.




திருமணத்துக்காக மணமகன் போல் அலங்கரித்து, அவர் அழைத்து வரப்பட்டார். மேலும் மரத்திற்கு மணப்பெண்ணுக்கு உரிய அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. திருமண அடையாளமாக மணமகள் மரத்திற்கு மணமகன் முத்தமிட்ட போது, கூடி இருந்தவர்கள் கைதட்டி வாழ்த்து தெரிவித்துள்ளனர். மேலும் திருமணத்திற்கு பின்னர் மரத்திற்கு கீழே சிறிய பழ விருந்தும் நடைபெற்றது.

## நடிகையுடன் நள்ளிரவு வேளையில் மோ.சைக்கிளில் சுற்றிய ஜனாதிபதி

பரிஸ், டிநெ.1

பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்காய்ஸ் ஹோலண்டே, நள்ளிரவில் நடிகை ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் ஊர் சுற்றியதை பத்திரிகை கள் சில படமெடுத்து வெளியிட்டுள்ளன. பிரான்ஸ் தலைநகர் பரிஸில் உள்ள எலிசி மாளிகையில் தங்கியிருக்கும் பிராங்காய்ஸ் ஹோலண்டே, 42 வயதான பிர பல நடிகை ஜூலி கயாத்தை கடந்த சில வருடங்களாகக் காத லித்து வருகிறார்.




இந்நிலையில், ஹோலண்டே நள்ளிரவில் மோட்டார் சைக்கிளில் ஹெல் மெட் அணிந்து கொண்டு, நடிகை தங்கியிருந்த குடியி ருப்புக்குச் சென்றதும், பின்னர் இருவரும் சேர்ந்து புறப்பட்டுச் சென்ற ஒளிப்படங்கள் 12 மொழி பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த ஹோலண்டே, இது தொடர்பாக விசாரணை மேற் கொள்ளும்படி அதிகாரிகளுக்கு உத்த ரவிட்டுள்ளார். அதையடுத்து ஜனாதிபதி மாளிகை ஊழியர்களிடையே பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இந்நிலையில், பிரான்சில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதார நெருக்கடி மற்றும் உணவு உற்பத்தியில் தேக்கம் போன்றவற்றில் ஜனாதிபதி கவனம் செலுத் தாமல் நடிகையுடன் ஊர் சுற்றுவதாக சர்கோசி உட்பட பல் வேறு எதிர்க்கட்சித் தலைவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். (வ)

## 10.2 லட்சம் மின் விளக்குத் தோரணம் ஆஸ்திரேலியாவில் கின்னஸ் சாதனை

கான்பெரா, டிசெ.1

ஆஸ்திரேலியாவில் 10 லட்சத்து 20 ஆயிரம் வண்ண மின் விளக்கு தோரணங்கள் தொங்கவிடப்பட்டு கிறிஸ்மஸ் பண்டிகைக்கு வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. இது கின்னஸ் சாதனை புத்தகத்திலும் இடம்பெற்றுள்ளது.

கிறிஸ்மஸ் பண்டிகைக்கு சுமார் ஒரு மாத காலம் உள்ள நிலையில் உலகம் முழுவதும் பல் வேறு பகுதிகளில் தற்போதிருந்தே பொதுமக்கள் பண்டிகைக்கு தயாராகி வருகின்றனர். ஆஸ்திரேலிய தலைநகர் கான்பெரா வில் உள்ள வழக்கறிஞர் டேவிட் ரிச்சர்ட், கிறிஸ்மஸின்போது அலங்கரிக்கப்படும் வண்ண மின் விளக்குகள் மூலம் சாதனை படைக்க முடிவு செய்தார்.



அவரது முயற்சியின் மூலம் கான்பெராவில் உள்ள ஒரு வணிக வளாகம் 10 லட்சத்து 20 ஆயிரம் மின் விளக்குகளால் ஜொலிக்கத் தொடங்கியுள்ளன. இவை அனைத்துமே எல்ஈடி பல்புகள். தனியார் மின் நிறுவனம் ஒன்று இந்த சாதனைக்கு இலவசமாக மின்சாரம் கொடுத்து உதவியுள்ளது. (வ)

## 22 ஆண்டுகளுக்கு பின்னர் வெடித்துச் சிதறிய எரிமலை

டோக்கியோ, டிசெ.1

ஜப்பானில் 22 வருடங்களுக்குப் பின்னர் எரிமலை ஒன்று வெடித்துச் சிதறியதில் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெற்கு ஜப்பானில் உள்ள அசோ எரிமலை வெடித்து லாவா குழம்புகள் வெளியேறுகின்றன. இதனால் ஏற்படும் புகை காரணமாக ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை வானம் சாம்பல் நிறத்துடன் காணப்படுகிறது. (வ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாத இயக்கங்களை கால் பதிக்க விடமாட்டோம்

## ராஜ்நாத் சிங் உறுதி

கவுகாத்தி, டிசெ.1

இந்தியாவில் தீவிரவாத இயக்கங்களை கால் பதிக்க விடமாட்டோம் என்று உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

அசாம் மாநிலத் தலைநகர் கவுகாத்தியில் அனைத்து மாநில பொலிஸ் டி.ஜி.பிக்கள் மற்றும் உளவுத்துறை அதிகாரிகளுக்கான 2 நாள் மாநாடு நேற்று ஆரம்பித்தது.

மாநாட்டை ஆரம்பித்து வைத்து உள்துறை அமைச்சர் பேசுகையில்,

நாட்டு மக்களைப் பாதுகாப்பதில் எமது பொலிஸ் படைகள் மற்றும் உளவு அமைப்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்தப் பெருமை அனைத்தும் பொலிஸ்படைகளையும், மத்திய ரிசேர்வ் பொலிஸ் படைகளையும் தான் சேரும்.

மேற்கு வங்காளத்தில் தீவிரவாதிகள் ஊடுருவல் தடுக்கப்பட்டது. இந்திய இளைஞர்களில் சிலர் தீவிரவாதிகளாக மாற்றப்படுவதற்கான காரணங்களை மத்திய அரசு மிகுந்த கவனத்தில் கொண்டுள்ளது.


அல்குவைதா இயக்கம் இந்தியாவை மெல்லமெல்ல இஸ்லாமிய நாடாக மாற்றப் போவதாக மிரட்டல் விடுத்துள்ளது குறித்து நாம் கவலைப்படத் தேவையில்லை. அந்த மிரட்டலைச் சந்திக்க இந்தியா தயாராக உள்ளது. உலகம் முழுவதும் பல தீவிரவாத இயக்கங்கள் செயற்படுகின்றன. ஆனால் இந்தியாவில் எந்த தீவிரவாத இயக்கத்தையும் கால் பதிக்க விடமாட்டோம். வடகிழக்கு மாநிலங்களில் வீதிப் போக்குவரத்து உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகள், வளர்ச்சிப் பணிகள் மிக மோசமாக உட்ளன. மத்திய அரசு தற்போது இந்த வட கிழக்கு மாநிலங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம் படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போது இடதுசாரி தீவிரவாதம் உள்ள மாநிலங்களில் வன்முறைச் சம்பவங்கள் குறைந்து வருகின்றன.

அதேசமயம் நாட்டில் சைபர் குற்றங்கள் பெருகி வருகின்றன. தேச விரோத சக்திகளும், சமூக விரோத சக்திகளும் இதைப் பயன்படுத் திக் கொள்கின்றன. எனவே சைபர் குற்றங்களைத் தடுக்க கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். முக்கிய தேசிய நெடுஞ் சாலைகளில் 2019 ஆம் ஆண் டுக்குள் கண்காணிப்பு கமராக் கள் கண்டிப்பாகப் பொருத்தப்பட்டு விடும் என்று தெரிவித்தார்.(வ)



ராஜ்நாத் சிங்

## கையெறி குண்டு வீச்சு ஸ்ரீநகரில் 7 பேர் காயம்



ஸ்ரீநகர், டிசெ.1

காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் பரபரப்பான லால் சவுக் பகுதியில் கையெறி குண்டுவீசி தாக்குதல் நடத்தப்பட்டதில் 7 பேர் காயமடைந்துள்ளனர். ஸ்ரீநகரில் மக்கள் நடமாட்டம் அதிகம் நிறைந்த பகுதி சவுக். அந்தப் பகுதியில், நேற்றுமுன்தினம் பிற்பகல் தீவிரவாதிகள் கையெறி குண்டு வீசி தாக்குதல் நடத்தினர். இதில் 7 பேர் காயமடைந்துள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.


சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறும்போது, லால் சவுக், பலேடியம் திரையரங்கு பகுதியில் நின்றிருந்த பாதுகாப்புப் படையினரைக் குறிவைத்து கையெறி குண்டுகள் வீசப்பட்டன. ஆனால், அவை தவறி வீதியோரம் விழுந்து வெடித்தன. அந்தவழியாகச் சென்றவர்களில் 7 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் எஸ். எம். ஹெச்.எஸ். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்தைப் பொலிஸார் சுற்றி வளைத்தனர். தப்பியோடிய தீவிரவாதிகள் பிடிக்க தீவிர தேடுதல் வேட்டை நடைபெறுவதாக பொலிஸார் தெரிவித்தனர். காஷ்மீரில் சட்டப்பேரவை தேர்தல் 5 கட்டங்களாக நடைபெற்று வருகிறது. முதல் கட்ட தேர்தல் கடந்த 25 ஆம் திகதி நடைபெற்றது. 2 ஆவது கட்டத் தேர்தல் நாளை 2 ஆம்திகதி நடைபெறுகிறது. இந்நிலையில், ஸ்ரீநகரில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். (வ)

## ஆளில்லா விண்கலத்தை செலுத்துகிறது இஸ்ரோ

மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் திட்டத்தின் முதல் படியாக, ஆளில்லா விண்கலத்தைச் செலுத்தவுள்ளதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகத்தின் இயக்குநர் எம்.வி. எஸ்.பிரசாத் தெரிவித்தார்.

ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சதீஷ் தவண் விண்வெளி ஆய்வு நிலையத்தில் சனிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-



இந்த ஆளில்லா விண்கலத்தை ஜி.எஸ்.எல்.வி.எம்.கே.3 ரொக்கெட் தாங்கிச் செல்கிறது. இதுவரை விண்ணில் ஏவப்பட்ட ரொக்கெட்டுகளில் இது அதிக எடை கொண்டதாகும். இதன் எடை 613 தொன். மேலும் ரொக்கெட் தாங்கிச் செல்லும் ஆளில்லா விண்கலம் 3,735 கிலோ எடை கொண்டதாகும். இதன் உயரம் 2.7 மீற்றர், வட்டம் 3.1 மீற்றர்சுற்றளவில்தயாரிக்கப்பட்டது. மனிதனைவிண்வெளிக்கு அனுப்பும் திட்டத்தில் இந்திய விண்வெளி ஆராய்ச்சியின் முதல்படி இதுவாகும். இந்த ஆளில்லா விண்கலம் டிசெம்பர் மாதம் 15 -20 ஆம் திகதிக்குள் விண்வெளிக்கு அனுப்பி சோதிக்கப்படும். இந்தச் சோதனையின் வெற்றியைப் பொறுத்தே விண் வெளிக்கு மனிதனை அனுப்பும் திட்டம் அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லப்படும். எனினும், இன்னும் இரண்டு ஆண்டுகளில் விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் திட்டத்தை இந்தியா நிறைவேற்றும். (வ)

## பள்ளத்தில் பஸ் கவிழ்ந்து 12 பேர் சாவு



காத்மாண்டு, டிசெ.1

நேபாளத்தில் கைலாலி மாவட்டத்தில் மலைப் பாதையில் சென்று கொண்டிருந்த பஸ் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 12 பேர் உயிரிழந்தனர். 29 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதுகுறித்து பொலிஸார் கூறியதாவது:-

திபாயல் என்ற இடத்தில் இருந்து மகேந்திர நகருக்கு பஸ் சென்று கொண்டிருந்தது.

தமாய் தண்டா மலைப் பகுதியில் சனிக்கிழமை அதிகாலையில் அந்த பஸ் செல்லும்போது திடீரென 300 மீற்றர் பள்ளத்தில் சரிந்து வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் 8 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 4 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு- சிகிச்சை பயனின்றி உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த மேலும் 29 பேர் மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில், 5 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில், சாரதியின் கவனக் குறைவால் விபத்து இடம் பெற்றது எனத் தெரியவந்தது. அதையடுத்து, ஓட்டுநரையும், அவரது உதவியாளரையும் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

## நைஜீரிய மசூதி மீதான தாக்குதலுக்கு ஐ.நா. கண்டனம்

நைஜீரியாவின் கனோ நகரில் உள்ள மசூதியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இரட்டைக் கோபுர குண்டு வெடிப்பில் 92 பேர் உயிரிழந்தனர்.

இந்த பயங்கரவாத தாக்குதலுக்கு ஐ.நா. கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ -மூன்,

பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்க நைஜீரிய அரசு எடுக்கும் அனைத்து விதமான நடவடிக்கைகளுக்கும் ஐ.நா. ஆதரவளிக்கும்" என்றும் கூறியுள்ளார்.

மசூதியில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த நூற்றுக்கும் மேற்பட்டோர், மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

மசூதிக்குள் தொழுகைக்காக ஏராளமானோர் கூடியிருந்த நிலையில், தொழுகை ஆரம்பித்த பின்னர், பிற்பகல் 2 மணியளவில் அடுத்தடுத்து இரண்டு முறை வெடிகுண்டுகள் வெடித்ததில் 92 பேர் உயிரிழந்தனர்.

அதையடுத்து, அந்தப் பகுதியில் மறைந்திருந்த போகோ ஹராம் தீவிரவாதிகளுக்கும், பொலிஸாருக்கும் இடையே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. (வ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்சுவை

## ஓய்வின்றி உழையுங்கள்

உங்களிடம் உள்ளதை எல்லாம் பிறருக்கு கொடுத்துவிட்டு பிரதிபலன் எதிர்பாராமல் வாழுங்கள். நாம் உண்பதும், உடுப்பதும், உறங்குவதும் கடவுளுக்காகவே. அனைத்திலும் எப்போதும் கடவுளையே காணுங்கள். ஓர் எஜமானனைப் போல கடமையைச் செய்யுங்கள். அடிமையைப் போல இருக்காதீர்கள். சுதந்திர உணர்வுடன் பணியாற்றுங்கள். சாகின்ற நிலையிலும் கூட நாம், ஒருவர் யார் எப்படிப்பட்டவர் என்று கேள்வி கேட்காமல் உதவி செய்வது தான் கர்மயோகம். சுதந்திர உணர்வு இல்லாத வரையில் மனதில் அன்பு தோன்றுவதில்லை. அடிமையாகிவிட்டால் உண்மையான அன்புக்கு இடமே இல்லை. ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் வேலைகளைச் செய்து கொண்டே இருங்கள். ஆனால் வேலைகளுக்குள் கட்டுப்பட்டு விடாதீர்கள். வாழ்வில் மனிதன் உயர வேண்டுமானால் கடுமையான சோதனைகளைக் கடந்து சென்றாக வேண்டும். மற்றவர்களுக்கு நன்மை ஏற்படுமானால் நரகத்துக்குக் கூட செல்வதற்குத் தயாராக இருங்கள். சாவு வருவது உறுதியாக இருக்கும்போது ஒரு நல்ல காரியத்துக்காக உயிரை விடுவது மேல். உலகில் நல்லவர்கள் பெரிய தியாகங்களைச் செய்கிறார்கள். அதன் விளைவாக வரும் நன்மைகளை மனித குலம் முழுவதும் அனுபவிக்கிறது. உலக வாழ்வில் இருந்து தப்பி ஓட முயற்சி செய்ய வேண்டாம். வெற்றியோ தோல்வியோ போராடுங்கள். பாமரன் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவன் தெய்வமாகவும் உயரவேண்டும். இதுவே ஆன்மிகத்தின் பயன். தெய்வீகத் தன்மை இல்லாமல் பெறும் மிதமிஞ்சிய அறிவும், ஆற்றலும் மனிதர்களை மிருகங்களாக்கி கீழ் நிலைக்குத் தள்ளிவிடும்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



சுயநலம், சுயநலமின்மை இந்த இரண்டையும் தவிர கடவுளுக்கும் சாத்தானுக்கும் வேறு எந்தவிதமான வேறுபாடும் கிடையாது. ஆகவே ஓய்வின்றி உழைப்பதன் மூலம் சிறந்த பயனைப் பெற்றிடுங்கள்.

## நாளை

**கார்த்திகை-16 செவ்வாய்க்கிழமை | 02.12.2014**

திதி:ஏகாதசி மு.இ.10.05 வரை
நட்சத்திரம்: ரேவதி
பி.இ.01.20

சுபநேரம்:10.45-12.15 வரை
இராகுகாலம்: 03.15-04.45 வரை
ஏகாதசி விரதம்

## பாலூட்டும் தாய்மார்கள் கோபப்படாதீர்கள்



தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் கோபப்படக் கூடாது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். கோபத்தின் உச்சத்தில் இருக்கும் தாய் தன் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுத்தால் அந்த கோப உணர்ச்சியினால் ஏற்படும் கெடுதல்கள் அந்த பாலையே நஞ்சாக்கி, குழந்தை இறக்கும் வாய்ப்பை கூட ஏற்படுத்தும். எனவே தாய்மார்கள் பாலூட்டும் போது அமைதியான சூழ்நிலையில் தாய்ப்பாலூட்ட வேண்டும். அதே போல் அவசர அவசரமாகவும் பால் கொடுப்பதை தவிர்க்க வேண்டும். குழந்தைக்கு பால் கொடுக்கும் போது கோபமோ, தேவையற்ற எந்தச் சிந்தனையும் மனதில் இருக்கக் கூடாது. கோபத்தினால் நம்முடைய சக்தி வீணாகிறது. நரம்பு மண்டலம் முழுவதும் சீர்குலைகிறது. உடல் பதறுகிறது. உடலில் சோர்வு ஏற்படுகிறது. மறுபடியும் உடல் தன்னிலைக்கு வர பல மணி நேரங்கள் ஆகின்றன. தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்க்கவும் கோபம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்கின்றனர் நிபுணர்கள்.




வசம்பு வெப்பத்தை உண்டாக்கி பசியைத் தூண்டி வயிற்றிலே இருக்கின்ற வாயுவை அகற்றக்கூடிய தன்மை உடையது. வாய் குமட்டலையும், வாந்தியையும் உண்டாக்க செம்பை நன்கு பொடி செய்து ஒரு கிராம் அளவு உட்கொள்ள வேண்டும். வசம்பை வறுத்துப் பொடியாக்கி; கால் கிராம் தேனில் சேர்ந்து குழைத்து வர சளி, வாயு ஆகியவற்றுறை அகற்றிப் பசியை உண்டாக்கும். வசம்பைச் சுட்டுச் சாம்பலாக்கித் தேனில் குழைத்து நாவில் தடவ வாந்தி, குமட்டல் தீரும். செம்பைக் கருக்கிப் பொடியாக்கி 100 மில்லி கிராம் அளவாகத் தாய்ப் பாலில் கலக்கி சிறு குழந்தைகளுக்குக் கொடுக்க வயிற்றுப் பொருமல், வயிற்றுப் போக்கு, வயிற்றுவலி ஆகியவை தீரும். வசம்புத் துண்டை வாயிலிட்டுச் சுவைக்க, உமிழ்நீர் அதிகம் சுரக்கும். தொண்டைக் கம்மல் இருமலை அகற்றும். குழந்தைகளுக்கு உண்டாகும் சுரம், இருமல், வயிற்று வலி இவை குணமாக வசம்புடன் அதிமதுரம் சேர்த்துக் கசாயமிட்டு காலை, மாலை இரண்டு வேளையும் கொடுக்கக் குணமாகும். வசம்பைத் தூள் செய்து தேனுடன் கலந்து திக்குவாய் உடையவர்கள் தினமும் காலையில் நாவில் தடவி வர பேச்சு திருந்தும். பசியைத் தூண்டவும், அஜீரணத்தைப் போக்கி வயிற்றில் சேர்ந்த வாயுவை நீக்கவும் வசம்பு ஒரு பங்கும் பத்து பங்கு வெந்நீரும் சேர்த்து ஊற வைத்து வடிகட்டி பதினைந்து மி.லீ. முதல் முப்பது மி.லீ. வீதம் அருந்தி வர வேண்டும். வயிற்றில் சேர்ந்த வாயுவை அகற்ற வசம்பை அடுப்பில் வைத்து சுட்டுக் கரியாக்கி, அதனை தேங்காய் எண்ணெயுடன் கலந்து அடி வயிற்றில் பூச வேண்டும். சகலவித விஷக்கடிகளுக்கும் இதன் வேரை வாயிலிட்டு மென்று வர விஷம் முறியும்.

## வாயுவை அகற்றும் குணமுடைய வசம்பு



## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | 6 | | | | 7 | 9 |
| | 7 | 9 | | | | 5 | | |
| 8 | | | 7 | 5 | | | | 1 |
| 5 | 6 | | | | | 9 | | |
| | 9 | 8 | | | | 6 | 3 | |
| | | 1 | | | | | 2 | 8 |
| 9 | | | | 3 | 4 | | | 2 |
| | | 4 | | | | 8 | 5 | |
| 2 | 8 | | | | 6 | | | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள்

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 9 | 6 | 8 | 2 | 1 | 7 | 3 | 5 |
| 1 | 8 | 5 | 7 | 6 | 3 | 4 | 2 | 9 |
| 2 | 7 | 3 | 9 | 5 | 4 | 1 | 8 | 6 |
| 8 | 3 | 9 | 2 | 4 | 5 | 6 | 1 | 7 |
| 7 | 6 | 2 | 1 | 9 | 8 | 3 | 5 | 4 |
| 5 | 4 | 1 | 6 | 3 | 7 | 2 | 9 | 8 |
| 3 | 2 | 8 | 4 | 7 | 9 | 5 | 6 | 1 |
| 6 | 1 | 7 | 5 | 8 | 2 | 9 | 4 | 3 |
| 9 | 5 | 4 | 3 | 1 | 6 | 8 | 7 | 2 |

ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபலமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனி பெயர்ச்சி உங்களுக்கு எப்படி? 02.11.2014 - 2017



27 நட்சத்திரங்கள், 12 ராசிகளுக்குமான பலன்களும் பரிகாரங்களும்

## சிம்மம்



***சிம்மராசி நேயர்களே!***

அதிகார தோரணையும், மற்றவர்களை அடக்கியாளும் எண்ணமும், முரட்டுத்தனமும், சக்தி மிக்கவரும், எதையும் தாங்கும் இதயமும், உயர்ந்த மனமும், புகழ்பெற்ற மனிதராகவும் இருப்பார். சிம்மராசிக்காரர்கள் அகன்ற தோள்களையுடையவராகவும், உயரமானவராகவும், பெரியதான எலும்புகள் மற்றும் தசைகளையுடையவராகவும் இருப்பார். கம்பீரமான தோற்றமுடையவராகவும், அகன்ற கண்களை உடையவராகவும் இருப்பார். மனநிலையைப் பொறுத்தவரை ஆசை அதிகமுள்ளவராகவும், இரக்க குணமுடையவராகவும், மரியாதைக்குரியவராகவும், உண்மையானவராகவும், தன்னம்பிக்கை மற்றும் எதையும் நேருக்கு நேர் பேசுபவராகவும், தைரியமானவராகவும், அதிகாரத்தை விரும்புபவராகவும், எதிலும் எப்போதும் முதலிடத்திலேயே இருப்பதை விரும்புபவராகவும், கலை ஆர்வமிக்கவராகவும் இருப்பார், சுதந்திர எண்ணமும், மிகுந்த நம்பிக்கையும், மனித குலத்துக்கு உதவுபவராகவும், நியாயாதிபதியாகவும், மற்றவர்களை மன்னிப்பவராகவும், அவர்கள் செய்த தவறுகளை, பாவங்களை மற்றும் குற்றங்களை மறப்பவராகவும் இருப்பார். நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவதிலும், திட்டமிட்டு காரியங்களை செய்வதிலும் தலைமைப் பதவிக்குத் தகுதியானவராகவும், அறிவுள்ளவராகவும், சிறந்த செயற்பாடுகளையுடையவராகவும் இருப்பார்.

கடந்த இரண்டரை வருட காலமாக 6இற்குடைய சனி உமது ராசிக்கு 3இல் உச்சம் பெற்று சஞ்சரித்தார். இதனால் சாதனைகள் படைக்க முடிந்தது. வெற்றிகளை குவிக்க முடிந்தது. எதிரிகள் விலகினர். 2.11.2014 இல் சனி உமது ராசிக்கு 4ஆம் இடமான சுகஸ்தானம் வருகிறார். குருபார்வையும் உள்ளது. இதனால் வீடுகட்ட கடன் கிடைக்கும். விலகிய சுற்றமும் நட்பும் கூடிக்குலவ இடமுண்டு. 26.1.2017 வரை 4 ஆம் வீட்டில் சஞ்சரிப்பார்.

சனி பகவானின் 3,7,10ஆகிய பார்வையினால் உமது ராசிக்கு 6,10,1 ஆகிய வீடுகளைப் பார்வை செய்வார்.

சனி பகவான் உமது ராசிக்கு 6ஆவது வீட்டைப் பார்வை செய்வதால் மாமன் மைத்துனர் வழியில் நிலவிய மனக கசப்பு மாறும். மகிழ்ச்சி கிட்டும். இஷ்ட தெய்வம்(அல்லது) குல தெய் வத்துக்கு நேர்த்திக் கடனை செலுத்துவீர்கள். நீண்ட கால கடன் தீரும். நோய் அகலும். வழக்கில் எதிர்பாராத தீர்ப்பு கிட்டும்.

சனி பகவான் உமது ராசிக்கு 10ஆவது வீட்டைப் பார்வை செய்வதால் கூட்டுத் தொழிலில் நிலவிய பிரச்சினைகள் தீரும். தந்தை மூலம் நிதியுதவி கிட்டும். உயர் அதிகாரிகளின் (அல்லது) அரசு வழிகெடுபிடிகள் தளரும். கடுமையானஉழைப்பும்நேர்மையான குணமும் உம்மை உயர்த்தும். உத்தியோக வழியில் செய்துள்ள மேல் முறையீட்டுக்கு சாதகமான பதில் கிட்டும்.

சனி பகவானின் பார்வை உமது ஜென்மராசியில் பதிவதால் மனதில் குழப்பம் அதிகரிக்கும். புதிய முடிவுகள் எடுப்பதில் இழுபறி நிலவும். தன்னம்பிக்கை குறையும். உடனிருப்பவர்கள், சொந்த பந்தங்கள் மறைமுகமாக வஞ்சனை பேசுவர். உமது உடல் நலனிலும் உமது மனைவியின் உடல் நலனிலும் கவனம் தேவை. கிரக பலமற்ற சிலர் தந்தையை பிரிய நேரும்.

13.7.2015 வரை குரு உமது ராசிக்கு 12இல் அயனசயன போக ஸ்தானத்திலிருப்பதால் கணவன்-மனைவி இடையில் அன்னியோன்னியம் நிலவும். கூட்டுத் தொழில் விருத்தியடையும். 14.7.2015இல் குரு உமது ஜென்மராசியில் வருவதால் ஸ்தானபேரம் உண்டாகும். உமது மகன்(அல்லது)மகள் வெளிநாடு செல்ல இடமுண்டு. பூர்வீக சொத்தில் வில்லங்கம் தீரும். புத்திர பாக்கியம் கிட்டும். குரு பார்வை சாதகமாக இருப்பதால் அல்லல் குறையும். ஆனந்தம் கிட்டும்.

தற்போது ராகு 2ஆம் வீட்டில் இருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு பாதிப்புக்கள் உண்டாகும்.

பண வரவுகள் சிறப்பாக இருக்காது. கேது 8இல் இருப் பதால் குடும்பத்தில் ஒற்றுமை குறைவாக இருக்கும். பெரிய முதலீடுகளை ஈடுபடுத்தும் முன் சிந்தித்துச் செயற்படவும்.

**உடல் நிலை:**

உடல் நிலை திருப்திகரமாக இருக்கும். அடிக்கடி சிறுசிறு பாதிப்புக்களை ஏற்படுத்தி மருத்துவ செலவுகளை உண்டாக்கும். தேவையற்ற அலைச்சல், மன அழுத்தம் அதிகரிக்கும். நெருக்கமானவர்களுக்கு உடல்நிலை பாதிப்புகள் ஏற்படும்.

**உத்தியோகத்தர்கள்:**

பணியில் எதிர்பார்க்கும் உயர்வுகள் கிடைக்கப் பெற்று மகிழ்ச்சி உண்டாகும். தேவையற்ற இடமாற்றங்களும் இடர்பாடுகளும் உண்டாகும். பணியில் சற்று கவனமுடன் செயற்பட்டால் மேல் அதிகாரிகளின் ஆதரவுகளை சிறப்பாக பெற முடியும். புதிய வேலைதேடுபவர்களுக்குத்தகுதிக்கேற்ற வேலை கிடைக்கும்.

**மாணவர்களுக்கு:**

மாணவர்களுக்கு கல்வியில் மந்த நிலை உண்டாகும் என்பதால் அதிக கவனமெடுத்து படிப்பதே நற்பலனைத் தரும். தீய நண்பர்களின் சகவாசங்களைத் தவிர்ப்பது நல்லது. விளையாட்டுக்களில் ஈடுபடும் போது சற்று ஜாக்கிரதையுடன் நடந்து கொள்வது நல்லது.

அதிர்ஷ்டக் குறிப்புகள்: எண்-23,24,35,46,95,107 கிழமை-புதன், ஞாயிறு, திசை-வடக்கு, நிறம்-பச்சை, வெள்ளை, கல்-மரகதம், தெய்வம்-விஷ்ணு.




# பெண்களுக்கான சட்டம்

பெண்கள் எவ்வாறு மாண்போடும், சமமான வகையில் பொது இடங்களிலும் பணியிடங்களிலும் மதித்து நடத்தப்பட வேண்டும் என்பதை பெண்களுக்கான சட்டங்கள் தெளிவு படுத்துகின்றன. ஆனால் நடைமுறையில் நாம் காண்பதோ பெண்களின் பாதுகாப்பற்ற நிலை. 1993ஆம் ஆண்டில் வியன்னாவில் நடந்த "உலக மனித உரிமை மாநாட்டில்" பெண்களின் உரிமைகளை மீறுதல் மிகக் கொடிய மனித உரிமை மீறல் என்பதைச் சுட்டிக்காட்டப்பட்டது. இந்தச்சட்டம் எல்லா இடங் களிலும் பணி செய்யும் பெண்களுக்கு பொருத்தமானதாக உள் ளது. அரசுத்துறையாகவோ, தனியார் துறையாகவோ, வேறு எந்த நிறுவனங்களாக இருந்தாலோ அங்கு பெண்கள் பாலியல் ரீதியான வன்முறைகளால் பாதிக்கப்பட்டால், சட்டத்தின்மூலம் நீதி பெறலாம். மேலும், பாலியல் வன்முறைக்குத் தூண்டிய அதிகாரிகளையோ, ஏனைய ஆண்களையோ, சட்டபூர்வமாக நடவடிக்கை எடுத்து தண்டிக்கலாம். வேலை செய்யும் இடங்களில் பாதுகாப்பு ஏற்பட்டால், பெண்கள் பல பணிகளில் பங்கெடுத்து நாட்டின் ஒட்டு மொத்த சமூக பொருளாதார முன்னேற்றத்துக்கு பெரிதும் துணை செய்யலாம். இந்த பாதுகாப்புச் சட்டம் 'பாலியல் வன்முறை' என்றால் என்ன என்ற தெளிவான விளக்கத்தையும் வழங்குகிறது பெண்களுக்கு எதிராக நடத்தப்படும் வன்முறை மீறல்கள் அனைத்தும் மனித உரிமை மீறல்களே. அத்தகைய மனித உரிமை மீறலைச் செய்யும் நபர் யாராக இருந்தாலும் எந்தப் பதவியிலிருந்தாலும் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். பெண்களின் பாதுகாப்புக்கு மிகவும் உதவி செய்திடும் வகையில் சட்டங்கள் அமையப் பெற்றுள்ளன. சரியான வகைகளில் தாமதமின்றி இந்தச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால், கண்டிப்பாக தொடர்ந்து கொண்டிருக்கும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைச் செயல்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கலாம். நாட்டின் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு எல்லாத்துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமெனில் வேலை செய்யும் இடங்களில் பெண்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும்.



# பெண்களின் பாதுகாப்பு

பெண்கள் கல்வி கற்று பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகிறார்கள் என்று வெளிப்படையாகத் தெரிந்தாலும், அந்தத் துறைகளில் உள்ள பெண்கள் பாதுகாப்போடு பணி செய்ய முடிகிறதா என்றால் அது ஒரு பெரிய கேள்விக் குறிதான். பெரும்பாலான துறைகள் ஆண்களால் நடத்தப்படுவதாலும் பெரும்பான்மையான உயர் அதிகாரிகள் ஆண்களாக இருப்பதாலும் பெண்கள் எவ்வளவுதான் கல்வி கற்றிருந்தவர்களாக இருந்தாலும் அந்த துறைகளில் ஆணாதிக்கத்தின் கீழ் அடிமைகளாகவே உள்ளனர்.

நகர்புறங்களில் பல நிறுவனங்களிலும், தொழிற்சாலைகளிலும், தொலைக்காட்சி நிறுவனங்களிலும், ஊடகங்களிலும் பணி புரியும் பெண்கள் பாதுகாப்பற்ற சூழலில் பல வகையான பணிகளைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். இன்னும் கிராமப்புறங்களில் வாழும் பெண்கள் பாதுகாப்பின்றி அதிகளவில் வாழ்க்கையைத் தொடருகின்றனர்.

இவ்வாறு பாதுகாப்பின்றி வாழ்க்கையைத் தொடரும் பெண்களின் வாழ்வில் பாதுகாப்பு கிடைக்குமா? என்று எத்தனையோ பெண்களும், பெண்கள் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட ஆர்வலர்களும் ஆவலோடு எதிர் பார்த்துக் காத்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் கணக்கியல்
ஆசிரியர் தே. செந்தூரன்
அவர்களின் அருமைத்தந்தை
**வைரமுத்து தேவராசா**
அவர்கள் 27.11.2014 இறைபதமடைந்தமையை யிட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் நல்லுறவு மன்றம்
(54461) (45.3)
**யா/ செங்குந்த இந்துக்கல்லூரி**

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**இரங்கநாதன்**
**பிரபாசங்கர் (குஞ்சுபவி)**
திதி: தசமி

மண்ணுலகில்
16.03.1967

விண்ணுலகில்
30.11.2006

தரணியிலே தலைநிமிர்ந்து தனித்துவமாய்
சுடர்விட்ட அப்பாவே! எம் தலைவனே!
தரணியிலே எமையெல்லாம் தனித்துத்
தவிக்க விட்டுத் தனியாகச் சென்றதெங்கே?
தவிக்கின்றோம் நாம் விடை இன்றியே...

உங்கள் பிரிவால் துயரும்:
**குடும்பத்தினர்.**
உசன் தெற்கு,
(கி.17940) (45.6) மிருசுவில்.

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி காந்தரூபி (அரியமலர்) சுப்பிரமணியம்**



தோற்றம்
05.08.1935

மறைவு
15.12.2010

திதி: பூர்வாட்ஷ தசமி
(01.12.2014)

நீர் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள்
நான்கு சென்று விட்டாலும்
உம் நினைவு எங்களை
விட்டு அகலவில்லை தினம்
தினம் உம் நினைவாகவே உள்ளது.
உமது நினைவால் தினம் வாடும்.

சித்தாவத்தை,
உடுவில் வடக்கு.
(54522)(4.3.6)
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

**திருமதி கனகமணி நடராசா**
(வித்தகபுரம், தெல்லிப்பழை)



மண்ணில்
மாணிக்கமாய்
12.05.1937


விண்ணில்
தாரகையாய்
29.11.2014

காற்றில் வந்த செய்தி கனவாகிப் போகாதோ...?
நேற்றிருந்த உந்தன் முகம் மீண்டு வாராதோ...
மரணம் உங்களைத் தழுவியது நம்ப முடியவில்லை...
மனம் உருகித் துடிக்கின்றோம் செய்வதறியவில்லை...
தாய்க்குத் தாயாக தலைதடவி வளர்த்தீர்-எம்
வாழ்விற்கு வழிகாட்டியாய் எமதருகிலிருந்தீர்
அன்புடன் பரிவுபாசம் ஊட்டி வளர்த்தீர்-எமை
பரிதவிக்கவிட்டு எங்கே சென்றீர்-
அம்மம்மா என அழைக்க இனியாருளர் எமக்கு
அழுது புலம்புகின்றோம் தாங்கொணதுயர் சுமந்து
அடுத்த பிறப்பும் நீர் எமக்கு அம்மம்மாவாக
ஆண்டவனிடம் வரம் கேட்டு தொழுகின்றோம்-அம்மம்மா
உங்கள் ஆன்மா சாந்திபெற தொழுதேற்றி-எம்
கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்கின்றோம்.
அம்மம்மா உங்கள் கமலத்திருவடிக்கு...
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் மறைவால் துயருறும்
**பேரப்பிள்ளைகள்.**
(54525) (4.3.6)


# செய்திகள்

## அலுவலகத்துக்கான பிரத்தியேக பேஸ்புக்



சமூகவலைத்தளங்களில்முக்கிய இடத்தில் இருக்கும் பேஸ்புக் தற்போது அலுவலக உபயோகத்துக்கான பிரத்தியேகத் தளத்தை ஏற்படுத்த திட்டமிட்டு வருவதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

ஏற்கனவே அலுவலக ரீதியிலானஉபயோகத்துக்காகஇணையத்தளமாக 'லிங்கிடு இன்' உள்ளிட்ட சில தளங்கள் செயற்பட்டு வருகின்றன. இவை சில நாடுகளில் சிறப்பாக உபயோகப்படுத்தப்பட்டாலும், அவை பேஸ்புக் போன்ற வரவேற்பையும் பயனீட்டாளர்களின் விருப்பங்களையும் அனைத்து நாடுகளிலும் பெறவில்லை. இந்த நிலையில் 'பேஸ்புக் அட் ஓர்க்' என்ற புதிய திட்டத்துக்கான பணிகளை பேஸ்புக் நிறுவனம் இரகசியமாக மேற்கொண்டு வருவதாகவும்தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தப் புதிய இணையத்தளம் பயனீட்டாளர்களுக்கு தங்களது தனிப்பட்ட பேஸ்புக் பக்கத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட அளவில்அமைய வேண்டும் என்றும், இதில் பேஸ்புக்கின் பிற அம்சங்கள் வந்து விடக் கூடாது என்பதிலும் முக்கியத்துவம் செலுத்தி பேஸ்புக் நிறுவனம் முனைப்புடன் செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை இது தொடர்பான அதிகார பூர்வ அறிவிப்பை பேஸ்புக் நிறுவனம் வெளியிடாத நிலையில், இந்த முறை வந்துள்ள செய்தி உண்மையாக வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பு சமூக வலைத்தள ஆர்வலர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது






## சிறந்த ஸ்மார்ட் போன்கள்

இந்த ஆண்டு ஏகப்பட்ட புதிய ஸ்மார்ட் போன்கள் அறிமுகமாகி இருக்கின்றன. அனேகமாக எல்லா முன்னணி நிறுவனங்களுமே புதிய ரகங்களை அறிமுகம் செய்திருக்கின்றன. இவற்றில் சிறந்த அறிமுகங்களைப் பட்டியலிடுவது சிக்கலானது. ஆனால், இந்த ஆண்டின் சிறந்த ஸ்மார்ட் போன்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

எச்டிசி. ஒன் எம்8, ஒன் பிளஸ் ஒன், ஐபோன் 6 பிளஸ், சம்சுங் கேல்க்ஸி நோட் 4 மற்றும் நெக்சஸ் 6 ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

## வந்தாச்சு ஐபேட் ஏர்-2

அப்பிள் நிறுவனத்தின் ஐபேட் ஏர்– 2 இன் மெல்லிய மாதிரி மற்றும் ஐபேட் மினி 3 விற்பனைக்கு வரவுள்ளது. நாடு முழுவதும் உள்ள அப்பிள் சார்ந்த விற்பனையகங்களில் கிடைக்கும் என்று அப்பிள் நிறுவனம் தெரிவித்துள்ளது. ஐபேட் ஏர் –2 முந்தைய மாதிரியைவிடச் சற்றே மெலிதாக 6.1 மீ.மீ. அகலம் கொண்டுள்ளது. எடை 437 கிராம்.இதில் ஆறு மாதிரிகள் இருக்கின்றன. இவை வை.பை வசதி மற்றும் நேனோ சிம் போடக்கூடிய செல்லுலார் வசதி என இரண்டு விதங்களில் கிடைக்கின்றன.



## கேம் செயலிகள் உஷார்

ஸ்மார்ட்போன்களோடுசேர்த்து செயலிகளும் (ஆப்ஸ்) பிரபலமாகி இருக்கின்றன.

கேம் சார்ந்த செயலிகள், பயனாளிகள் மத்தியில் இன்னும் அதிகமாகச் செல்வாக்குப் பெற்றிருக்கின்றன. செயலிகளில் கட்டணச் செயலிகள் இருந்தாலும் பல செயலிகள் இலவசமாகக் கிடைக்கின்றன. இன் ஆப் பர்சேஸ் செயலி வடிவமைப்பாளர்களுக்கு வருவாய்க்கான நல்ல வழியாக இருந்தாலும் பயனாளிகளைப் பொறுத்த வரை இது பாதகமாக இருப்பதாகக் கருதப்படுகிறது. குறிப்பாகப் பிள்ளைகள் போனில் விளையாடும் போது தங்களை அறியாமல் இன் ஆப் பர்சேசில் ஈடுபடும்போது எதிர்பாராத செலவு ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்த மாதிரியில் உள்ள குறைகளைச் சீராக்குவது தொடர்பாகத் தீவிர விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், இதற்குச் சரியான தீர்வு பயனாளிகள் உஷாராக இருப்பதுதான் என்கின்றனர்.

அதாவது போனில் இன் ஆப் பர்சேஸ் வசதியையே செயலிழக்க வைத்து விடுவதுதான் என்கின்றனர். ஆண்ட்ராய்ட், ஐபோன், விண்டோஸ் என எல்லா போன்களிலும் இத்தகைய வசதி இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

## இடர் முகாமைத்துவ குழுவின் ஒத்திகை

யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் முன்னெச்சரிக்கை மற்றும் பதிலிறுத்தல் நடவடிக்கைகளில் மாவட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் உப குழுக்களை வலுப்படுத்தல் தொடர்பான ஒத்திகை நிகழ்வு நாளைசெவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ளாழ்ப்பார் கிராமத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிகழ்வில் இடர் முகாமைத்துவ மத்திய நிலையப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர்கள் பங்குபற்றவுள்ளனர். இந்தச் செயற்பாடானது ஆவணமாக்கப்பட்டு எதிர்காலத்தில் ஏனைய மாவட்டங்களிலும் விழிப்புணர்வு நடவடிக்கைகளின் போது குறித்த காணொலியை பயன்படுத்துமாறும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும் யாழ். மாவட்டத் திணைக்களத் தலைவர்களுக்கு யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார். (வ–9)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர் செல்வி கினுஜா சற்குணராஜா அவர்களின் அன்புத் தந்தை.

**சுப்பிரமணியம் சற்குணராஜா**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சக ஊழியர்கள், நிதிக்கிளை, யாழ். பல்கலைக்கழகம்

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
24.12.1935
மறைவு
04.12.2011
திதி: வளர்பிறை. தசமி

**வீரகத்தி கந்தையா**

இல. 40 முருகேசர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

அன்பு வழி நின்று அறம் பேணி
அணையாதவிளக்காக ஒளிவீசி
இன்பம் எய்திட எம் உயர்வுக்காய்
அல்லும் பகலும் அயராது உழைத்த
எம் இனிய தெய்வமே
பிறப்பு என்று வந்துவிட்டால் இறப்பு என்பதும்
உண்டெல்லோ
அதைநினைந்து தேறுகின்றோம்
உம்பெயர் சொல்லும் உறவுகள் நாம்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
புதிய நவீனா நகையகம், யாழ்ப்பாணம்.

(54536)

## 2ஆம் வருட நினைவஞ்சலி

திருமதி **செல்லம்மா காந்தசீலன்**



பிறப்பு 26 . 11 . 1952

இறப்பு 01 . 12 . 2012

திதி 09.12.2014

ஈராண்டுகள் கடந்த பின்பும்
எம் நெஞ்சத்தில் நீங்கா வாழும்
செல்லம்மாவே உன் அன்பைத்தேடி
அலைகின்றது எம்
நெஞ்சம்....

6ஆம் ஒழுங்கை, மானிப்பாய் வீதி, உடுவில்

தகவல்: குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி **சரஸ்வதி வேலாயுதம்**

தோற்றம்: 20.05.1940 மறைவு: 01.11.2014

உங்கள் ஆன்மா இறைவனடியில் சேர்ந்து சாந்தி பெற அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 01.11.2014 சிவபதமடைந்த எங்கள் அன்புத் தாயின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும்; கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், ஆகாரம் அளித்தோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருககும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு,

இன்று (01.12.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்தியத்திலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சூராவத்தை, சுன்னாகம்
077 658 0607, 075 039 6577

(54528)

குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவு

பிறப்பு
20.11.1953



இறப்பு
01.12.2010

திருமதி **மல்லிகா மரினி கிதபொன்கலன்**

''உலகில் என்னை அன்பு செய்தோரே
இப்போதும் எப்போதும் எனக்காக
இறைவனிடம் மன்றாட மறவாதீர்!''
''மண்ணில் வாழ்ந்து செல்லும் தாயே
விண்ணில் இறைவன் இன்பம் தருவார்''

குடும்பத்தினர்.
ஊறணி, காங்கேசன்துறை.

தற்காலிக முகவரி:
சித்திப்பந்தல் மேற்கு, இளவாலை.
077 652 7622, 075 301 9881

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

உமது ஆறுதலும் கனிவான சொல்லும்
எனக்கு ஆசீர்வாதமாக இருப்பதாக:
யோபு: 15:11

திருமதி **சவினம்மா அந்தோனிப்பிள்ளை**



தோற்றம்
10.12.1922

மறைவு
01.11.2014

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (01.12.2014) திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இந்த திருப்பலியில் கலந்துகொண்டு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக செபிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் பூசையின் பின்பு அன்னாரின் இல்லத்தில் இடம் பெறும் விருந்து உபசாரத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**
**பழைய சந்தை வீதி,**
**மாதகல்.**

(சி.17946) (45.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா

தென்மராட்சி, டிசெ.1
மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திருமதி ஜெ.தேவேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சிவானந்தமும் கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கு.தனுஷன், வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் திருமதி வ.வைகுந்தநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (வ–9)

## மரண அறிவித்தல்கள்

### முத்தையா தியாகராஜா



இல.28,2 ஆம் ஒழுங்கை, பலாலி வீதியைச் சேர்ந்த முத்தையா தியாகராஜா 29.11.2014 சிவபதம் அடைந்துவிட்டார்.
அன்னார் ருக்மணி (ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், தயாபரன், காலஞ்சென்ற சுரேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சோமசுந்தரத்தின் அன்புச் சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2014) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.28,2 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம். (54519) (45.6)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி கனகமணி நடராசா

தோற்றம் 12 . 05 . 1937



மறைவு 29 . 11 . 2014

திருமதி கனகமணி நடராசா

செல்லமுத்தர் வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வித்தகபுரம், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகமணி நடராசா (29.11.2014) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா-தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான நடராசா, சின்னையா, சிவக்கொழுந்து, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, கருணாநிதி, சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மகேந்திரராசா, சிறீஸ்கந்தராசா, ஈஸ்வரி, சறோயினிதேவி, சிவராசா, நாகேஸ்வரி, ஜெயந்தினி, ராஜவரோதயம், கிருபாகரன், சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயும், பேரம்பலம், மாணிக்கவாசகர், காலஞ்சென்ற சரவணபவன் மற்றும் சிறீறஞ்சன், கிருபராணி, ரேவதி, வசந்தி, மஞ்சுளா, சைலஜா, லதாஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுகுமாரன், காலஞ்சென்ற லவக்குமார் மற்றும் சோபனா, தாரணி, நந்தகுமார், ஆதவன், மயூரன், ஜனனி, சேயோன், சுகிர்தன், சுதாகர், நிலாணி, தனு, சந்தீப், சுவாதி, சாருகான், ஐஸ்வரியா, டினோஜா, சாயிதா, டினோஜன், சோகினா, தாரணி, கவின்ராஜ், ஓவியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபினா, தசானா, வைசன், பிரவீன், கவீனா, விதுசன், நிதுசன், ஆரியா, அச்யூன், அயன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் புத்தூர் வடக்கு, புத்தூரில் அமைந்துள்ள மருமகன் T.மாணிக்கவாசகர் இல்லத்தில் இன்று (01.12.2014) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:077 704 4078,
076 542 9345 (54524)(4.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## தேசிய சுகாதார வார நிகழ்வுகள் சாவகச்சேரியில் இன்று ஆரம்பம்

தென்மராட்சி, டிசெ.1
சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ள தேசிய சுகாதார வார நிகழ்வுகளை இன்று தொடக்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.
தேசிய சுகாதார வாரத்தின் முதல் நாள் நிகழ்வாக இன்று பாடசாலையின் தரிசிப்பு நிகழ்வு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்திலும்–
2 ஆம் நிகழ்வு நாளை சாவகச்சேரி நகர்ப்பகுதியில் டெங்கு பரிசோதனைகளும் 3 ஆம் நாள் நிகழ்வு நாளை மறுதினம் தாய் மார்கழகபோசாக்குவிழிப்புணர்வு நிகழ்வு கச்சாய் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் –
4 ஆம் நாள் நிகழ்வாக புற்று நோய் பரிசோதனைகள் வரணி வடக்கு பிரதேசத்திலும், 5 ஆம் நாள் நிகழ்வாக அரச நிறுவனங்களில் மருத்துவ சுகாதார பரிசோதனை நிகழ்வு கொடிகாமத்தில் உள்ள சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகத்திலும் 6 ஆம் நாள் நிகழ்வாக சாவகச்சேரி பிரதேச இளைஞர், யுவதிகளுக்கான போதைப்பொருள் பாவனை தடுப்பு தொடர்பாக சாவகச்சேரியிலும்–
7 ஆம்நாள்நிகழ்வாக மனநோயாளிகளின் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ–9)

## வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பும்

வலி.வடக்கு, டிசெ.1
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை யின் வாசிப்பு மாத இறுதி நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை புலோப்பளை பொதுநூலகமண்டபத்தில்பிற்பகல் 2 மணிக்குநடைபெறவுள்ளது.
பிரதேச சபைத் தவிசாளர் டொமி னிக் அன்ரன் தலைமையில் நடை பெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சிஉதவிஆணையாளர் என்.பிரபாகரன்கலந்துகொள்வார்.
சிறப்பு விருந்தினர்களாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி வி.ஜெயராணி, சுகாதார மருத்துவ அதிகாரி செல்வி இ.மைதிலி, கிளிநொச்சி வலய கல்விப் பிரதிப் பணிப்பாளர் க.சிறிகுமரன் ஆகியோர் கலந்து கொள்வர்.
சிரேஷ்ட விவசாயப் பணிப்பாளர் போதனாசிரியர் கே.கணேசலிங்கம், சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.சுப்பிரமணி யம் ஆகியோர் வாசிப்பு மாதம் தொடர்பாகச் சிறப்புரை வழங் குவார்கள். (வ–115)

## கருத்தரங்கு

க.பொ.த. (சா.த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன்கருதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலவச கல்விக் கருத்தரங்கு நாளை மறுதினம் புதன்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் காலை 10 மணி முதல் மதியம் ஒரு மணி வரை நடைபெறவுள்ளது.
மாணவர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன் பெறலாம். (ஓ)

## மரண அறிவித்தல்



### நாகமுத்து பாலேந்திரன்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், ஆலடி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து பாலேந்திரன் 29.11.2014 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் நாகமுத்து-செல்லபாக்கியம் தம்பதியரின் மூத்த மகனும், விசாகப்பெருமாள்-உலகநாயகி தம்பதியரின் மருமகனும், விமலாதேவியின் அன்புக்கணவரும், நித்தியா, ஆனந், வசந் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜோதிராஜா, சுவர்ணா ஆகியோரின் மாமனாரும், திராவிடனின் அன்புப்பேரனும், இராஜேஸ்வரி, நாகேந்திரன், தெய்வேந்திரன், யோகேந்திரன், காலஞ்சென்ற விஜயேந்திரன் ஆகியோரின் சகோதரரும், சோதிவேல், இந்துமதி, ஜெயந்தினி, ராதா, விமலநாதன், குணநாதன், கமலாதேவி, காலஞ்சென்ற குணதேவி மற்றும் அன்னராணி ஆகியோரின் மைத்துனருமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் வல்வை ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆலடி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. (சி/17949) (4.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே: 021 321 9236

## மாணவர் கௌரவிப்பு

தென்மராட்சி, டிசெ.1
சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணிக்கு கௌரவிக்கப்படவுள்ளனர்.
சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் கழகத் தலைவர் லயன் க.தர்சன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக சர்வதேச லயன்ஸ்கழக 306 பி1 மாவட்ட உதவி ஆளுநர் லயன் மருத் துவர் வீ.பி. தியாகராசா, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆகியோரும் –
சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம், ஆரம்ப பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.சர்வேஸ்வரனும், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, நலன்விரும்பி இரத்தினம் ரவீந்திரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.
இந்த நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலயத்தில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற 193 மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ–9)

♦ ♦ ♦

கிளிநொச்சி, டிசெ.1
கிளிநொச்சி அன்னை சாரதாதேவி வித்தியாலய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவரைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் நா.கணேஸ்வரநாதன் தலைமையில் நடைபெற்றவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் கலந்து கொள் ளவுள்ளார். (வ–18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தி / விளம்பரங்கள்

## பலநாள் திருடன் பிடிபட்டான் கைபேசியின் 'இமி' எண்ணால்

கரணவாய், டிசெ.1

பல திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட திருடனை அவர் திருடிய கையடக்கத் தொலைபேசியின் 'இமி' இலக்கம் காட்டிக் கொடுத்தது. அதனை அடுத்து விரைந்து செயற்பட்ட வல்வெட்டித்துறைப்பொலிஸார் அவனைக் கைதுசெய்ததுடன் தொலைபேசி வைத்திருந்த நபரையும் கைது செய்துள் ளனர்.

உடுப்பிட்டிப்பகுதியில்அமைந்துள்ள ஆசிரியரின் வீட்டுக்குள் கடந்த 28 ஆம்திகதி அதிகாலை நுழைந்த திருடன் மேசை மீது வைக்கப்பட்டிருந்த ஆசிரியரின் கைப்பையைத் திருடிச் சென்றுள்ளான். அதனுள் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாபெறுமதியான ஒருசோடிவளையல் 10 ஆயிரம் ரூபா பணம் மற்றும்புதியகையடக்கத்தொலைபேசியும்இருந்துள்ளன. இந்தத்திருட்டுத் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸில்முறைப்பாடு செய்யப்பட்டது.

அதை அடுத்து கையடக்கத் தொலைபேசியின் 'இமி'இலக்கத்தை வைத்துசாவகச்சேரியில்வைத்துஒருவரைபொலிஸார் கைதுசெய்தபோது குறித்த நபர் தான் வடமராட்சி சமரபாகுப் பகுதியிலுள்ள நபரிடமிருந்து இந்ததொலைபேசியை விலைக்கு வாங்கியதாகத் தெரிவித்தார்.

சமரபாகுப் பகுதிக்கு விரைந்த பொலிஸார் சம்பந்தப்பட்ட நபரைக் கைது செய்தனர். திருட்டுக்குற்றத்தை ஒப்புக் கொண்டதுடன், கையடக்கத்தொலைபேசியின் சிம்காட்டை கழற்றி எறிந்துவிட்டுதொலைபேசியை விற்றதாவும் வளையல்களை நகைக் கடை ஒன்றில் விற்றதாகவும் கூறினார்.

அடுத்து நகைக் கடைக்கு விரைந்த பொலிஸார் அங்குவிற்பனைக்குத்தயாராகவைத்திருந்த ஆசிரியரின் வளையல்களை கைப் பற்றிய துடன் திருட்டுடன் சம்பந் தப்பட்ட வரையும், தொலை பேசியையும் வைத்திருந்தவரையும் கைது செய்து அவர்கள் இருவரையும் பருத்தித்துறைமாவட்டநீதிவான் முன்னி லையில் கடந்த செவ் வாய்க்கிழமை முற்படுத்திய போது அவர் கள் இருவ ரையும் 14 தினங்கள் சிறையில் தடுக்குமாறு உத்தரவிடப்பட்டது.

(வ-108)

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் சற்குணராஜா

*(ஓய்வுபெற்ற யாழ். செயலக உத்தியோகத்தர்)*

கச்சேரி நல்லூர் றோட், 26, பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும், 296/4, ஆனந்தன் வடலி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சற்குணராஜா நேற்று (30.11.2014) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்– சின்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா– இராசம்மா தம்பதியரின் மருமகனும், யோகராணியின் அன்புக் கணவரும், கினுஜா (நீதிக் கிளை,யாழ். பல்கலைக்கழகம்), யனோஜா (சம்பத் வங்கி,திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பூமணி, சிதம்பரநாதன், தங்கராஜா, முத்துராஜா, துரைராஜா, கமலாவதி, தனலெட்சுமி மற்றும் இராசமணி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதர னும் பேரம்பலம், சண்முகநாதன்,ஆலாலசுந்தரம், இரட்ணசிங் கம், தங்கரெத்தினம்,பத்மநாதன், வசந்தகுமாரி, வசந்தகுமார் ஆகியோரின் மைத்துனரும்,சிவபாக்கியவதி, தங்கலட்சுமி, பவானி, சிவசோதி, சண்முகநாதன், கலாவதி, நளாயினி, காலஞ் சென்றவர்களான ரங்கநாதன், பூமணி,தங்கராணி, சுப்பிரமணி யம், பொன்னுத்துரை, கனகசபாபதி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 296/4, ஆனந்தன் வடலி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று (01.12.2014) திங்கட் கிழமை பி.ப. 4 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

296/4 ஆனந்தன் வடலி,
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் சீவரெத்தினம்



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் இல. 192, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் சீவரெத்தினம் இன்று (30.11.2014) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லத்தம்பி வள்ளியம்மை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னாச்சியின் மருமகளும், காலஞ்சென்ற சீவரெத்தினத்தின் மனைவியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், தம்பையா, நாகரெத்தினம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சத்தியரூபவதி மற்றும் கனகரூபவதி, திருமகள், தவக்குமார் ஆகியோரின் தாயும், காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் சௌந்தர நாயகம், ஹேமலதா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், சதாரூபன் (பிரான்ஸ்), சிவஜா (லண்டன்), யாழினி (யாழ். வேலணை சரஸ்வதி வித்தியாலயம்), கஜனனன் (ஜேர்மனி), எழினி (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 192, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
தவக்குமார் (மகன்).

## மரண அறிவித்தல்



### சின்னையா துரைராசா

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிட மாகவும் கொண்ட சின்னையா துரைராசா நேற்று (30.11.2014) கனடாவில் சிவ பதமெய்தினார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சிறிதரன், சிறிகாந்தன், சிறிபாலன், கீதாஞ்சலி, மைதிலி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்ற ஆறுமுகம் (ஓய்வுநிலை ஆசிரியர்) மற்றும் கந்தசாமி(ஓய்வுநிலை கிராம அலுவலர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, யோகலிங்கம் மற்றும் சிவானந்தம்மா, அன்னம்மா, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (06.12.2014) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. 011 416 519 0550 (கனடா)

(சி.17848) (46.8)

தகவல்:
சி.கந்தசாமி (சகோதரன்)

## மரண அறிவித்தல்



### கிருஷ்ணன் இராமலட்சுமி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணன் இராமலட்சுமி (30.11.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா மற்றும் சந்தனம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா -பேத்தியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், முத்தையா கிருஷ்ணனின் அன்பு மனைவியும், விஜயகுமாரன், சித்திராவதி (B.A இந்தியா), சுரேஷ்குமார்(தொழில்நுட்ப உத்தியோகத்தர் -நீர்பாசனத் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயும், பொன்னம்பலம், இராமச்சந்திரன், முத்துலட்சுமி, லட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரியும், ஸ்ராலின் கிருஷ்ணா, சுயாதா ஆகியோரின் அன்பு மாமியும், கவின், சாருகன், சாருகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
வன்னியசிங்கம் வீதி. 077 413 6298

(54527) (4.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### தேவராசா கனகபூசணி அம்மா

ஆனைக் கோட்டையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி கந்தையா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா கனகபூசணி அம்மா நேற்று 30.11.2014 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி விசாலாட்சி தம்பதிகளின் புத்திரியும், காலஞ்சென்ற இராமலிங்கம் தேவராசா (ஜெயக்குமார் ரெக்ஸ்ரைல்) அவர்களின் அன்பு மனைவியும், கனகாம்பிகை, விக்னேஸ்வரி, ஜெயராணி, ஜெயக்குமார், விமலேஸ்வரி (கனடா) ஆகியோரின், அன்புத்தாயாரும், கனகரத்தினம் (கரன் ஆட்ஸ்), காலஞ்சென்ற பாலசுந்தரம் (ஓய்வு பெற்ற பிரதம எழுது வினைஞர்) மற்றும் மகேந்திரராசா (ஓய்வு பெற்ற பரிசாரகர் - யாழ். போதனா வைத்தி சாலை), விமலேஸ்வரி, வேலாயுதம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 1.12.2014 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(47342)

கந்தையா வீதி,
சாவகச்சேரி

தகவல்:
தே.ஜெயக்குமார் (மகன்)



## மரண அறிவித்தல்

### வயிரமுத்து தேவராசா

பூநகரியை பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வயிரமுத்து தேவராசா (முன்னாள் ஊழியர் பரந்தன் இராசயனக் கூட்டுத்தாபனம்) அவர்கள் (26.11.2014)அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய வயிரமுத்து செல்லமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களாகிய பொன்னுச் சாமி இராசம்மா தம்பதிகளின் மருமகனும் திருமதி ஞானவல்லிசின் னத்துரை, காலஞ்சென்ற விஷகடி வைத்தியர் கந்தசாமி (VK) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சாந்த நாயகி (இளைப்பாறிய பிரதம லிகிதர்- யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்) அவர்க ளின் அன்புக்கணவரும் கலாநிதி முகுந்தன் (விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்), சொந்தூரன் (ஆசிரியர், யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி) காலஞ்சென்ற நிர்மலன் மற்றும் குருபரன் (லண்டன்), ஐங்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் றஞ்சித் சோபனா (உதவி முகாமையாளர் மக்கள் வங்கி, நாரன்பிட்டி), சுகந்தினி (ஆசிரியர் - யாழ்.கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்) கீர்த்திகா (இலண்டன்) ஆகியோ ரின் மாமனாரும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் மகேஸ்வரி (அமெரிக்கா), சிவகுரு நாதன் (கனடா), லோகநாயகி, குகதாசன் (லண்டன்), தில்லைநாயகி, தவராசா, (கனடா), கலாநாயகி (ஆசிரிய ஆலோசகர், யாழ்.வலயம்) ஆகியோரின் மைத்துனரும் அபிஷேக் (சென். பீற்றேஸ் கல் லூரி, கொழும்பு) சின்மயி (கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), வைஷா லி (ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), வைஷ்ணவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இல.15,3 ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

தகவல் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

# மாற்றுவலுவுடையோர் குறித்து விசேட கவனம் வேண்டும்

## கியூடெக் - கரித்தாஸ் இயக்குநர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ.1

மேற்கத்தேய நாடுகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான கௌரவங்களும் உதவிகளும் ஏராளமாகக் கொட்டிக் கிடக்கின்றன. ஆனால் எம் நாட்டில் அவர்களுக்கான விசேட சலுகைகள் செயற்பாட்டில் இல்லை. அரசு அவர்களை விசேடமாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் கியூடெக் கரித்தாஸ் இயக்குநரும் அருட்தந்தையுமான அருட்பணி யாவீஸ்.

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையமானது சர்வதேச மாற்றுத்திறனாளிகளின் தினத்தை யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் கொண்டாடியது. நிகழ்வின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசியபோதே அருட்தந்தை இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

சமூகத்தின் கட்டுமானங்களில் மிக முக்கிய தளமாக உருவாகிக்கொண்டிருப்பவர்கள் மாற்றுவலுவுடையோரே. சேவை பெறுநராக இருக்கும் அவர்கள் மனதளவில் சேவை வழங்கும்வல்லமைகொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

சமூகத்துடன் இணைந்த முறையில் வாழவே மாற்றுத்திறனாளிகள் விரும்புகின்றனர். எம்மிடம் இருந்து உதவிகளையே அவர்கள் எதிர்பார்க்கின்றனர். மாறாக அனுதாபங்களை அல்ல. அவர்களுக்கான உதவிகளை பூரணமாக வழங்க அரசு முன்வரவேண்டும்" – என்றார்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் இமெல்டா சுகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக சங்கானை பிரதேச செயலர் அ.சோதிநாதன், மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர் ச.சிவகுமாரன் ஆகியோரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் மாணவர்களிடையே கற்றலை ஊக்குவிக்கும் முகமாக கற்றல் உபகரணங்கள் பரிசாக வழங்கப்பட்டதுடன் கருவி நிலைய அங்கத்தவர்களின் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது. (வ–ரி)





## இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பயிற்சி கருத்தரங்கு

வவுனியா, டிசெ.1

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான தொழிற் பயிற்சி கருத்தரங்கு வவுனியா வடக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கில் நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டதுடன் தொழிற் பயிற்சி பெறுவதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க. பரந்தாமன், உதவி பிரதேச செயலாளர் வி. ஆயகுலன், தொழிற் பயிற்சி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.(வ–402)

## வடக்கு வரவு – செலவுத் திட்டம்; முதலாவது வாசிப்பு 4 ஆம் திகதி

யாழ்ப்பாணம், டிசெ.1

வடக்கு மாகாண சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட முதலாவது வாசிப்பு எதிர்வரும் 4 ஆம் திகதி இடம்பெறவுள்ள அமர்வில் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனினால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அடுத்த ஆண்டுக்குரிய வரவு – செலவுத் திட்டம் வடக்கு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இறுதிப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டம் ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு அரசால் வழங்கப்பட்ட ஆயிரத்து 440 மில்லியன் ரூபா நிதி பங்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் முதலமைச்சர் அமைச்சுக்கு 408 மில்லியன் ரூபாவும், சுகாதார அமைச்சுக்கு 317 மில்லியன் ரூபாவும், கல்வி அமைச்சுக்கு 303 மில்லியன் ரூபாவும், விவசாய அமைச்சுக்கு 167 மில்லியன் ரூபாவும், மீன்பிடி அமைச்சுக்கு 77 மில்லியன் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் விசேட திட்டங்களுக்காக 168 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் மேற்கண்டவாறு இறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்குரிய முதலாம் வாசிப்பு எதிர்வரும் 4 ஆம் திகதி இடம்பெறவுள்ள அமர்வில், முதலமைச்சரும், நிதியமைச்சருமான க.வி. விக்னேஸ்வரனால் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (த–5)

## இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சிறிசேனவுடன் நாளை சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ.1

பொது எதிரணி ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுக்கும் இடையில் நாளை செவ்வாய்க்கிழமை சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சந்திக்கவுள்ளமை அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடல் பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்பதற்காக, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் இன்று திங்கட்கிழமை கொழும்புக்கு வரவுள்ளார். 'காலி கலந்துரையாடல்' என்ற கடல் பாதுகாப்புக் கருத்தரங்கில் அவர் முக்கிய உரையாற்றவுள்ளார்.

இதன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இதன்போது சீன நீர்மூழ்கிகள் கொழும்புத்துறைமுகத்தில் தரித்து நின்றமை தொடர்பில் பேசுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும், தனித்துச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் டோவல்.

இந்தப் பயணத்தின் போது, எதிரணி பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள மைத்திரிபால சிறிசேனவையும், அவருக்கு பின்புல ஆதரவை வழங்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் சந்திக்கவுள்ளார்.

இதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, 'த ஹிந்து' நாளிதழ் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டுள்ளது. (த–5)

## நூற்றாண்டு விழா

கிளிநொச்சி, டிசெ.1

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் இந்து மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி ப.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்புவிருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள், ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் நூற்றாண்டு விழா மலர் வெளியீடும் பரிசளிப்பும் நடைபெறவுள்ளன. (வ–18)

## பருவகாலச் சீட்டுப் பயணிகளை ஏற்றாத திருமலை இ.போ.ச. பஸ்

தென்மராட்சி, டிசெ.1

பருவகாலச் சீட்டு வைத்துள்ள பயணிகளை ஏற்ற மறுக்கும் திருகோணமலை டிப்போவுக்கான இ.போ.ச. பஸ் திருகோணமலையிலிருந்து இரவு புறப்படும் பஸ் காலை 8.30 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தைச் சென்றடைகிறது.

அந்த பஸ்ஸில் அரச உத்தியோகத்தர்கள் தமது கடமை நேரத்துக்குள் செல்ல முடியும் என்று காத்திருந்து பயணிக்கின்றனர். கடந்த 5 தினங்களாக குறித்த பஸ்ஸின் நடத்துநர் பளைக்கு அப்பால் காத்திருக்கும் பயணிகளில் பருவ காலப் பயணச் சீட்டு வைத்துள்ளவர்கள் தவிர்ந்த ஏனையோரை மட்டும் ஏற்றிச் செல்வதாக பயணிகள் கவலை தெரிவித்தனர்.(வ–9)


17 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் சீனியர் இராசரத்தினம்

(நிற்சாமம், சங்கானை)

பூலோகம் 07.07.1946 வைகுந்தம் 01.12.1997



அன்பான அப்பாவே! பாசத்தின் திருவுருவே!

[illegible]

என்றென்றும் உம் நினைவில் வாழும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

நிற்சாமம், சங்கானை.

தகவல்: இராசரத்தினம் [illegible]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பரப்புரைக்கு பாப்பரசர் படம் மீண்டும் கிளம்பியது சர்ச்சை

## ஒழுக்கத்தை கடைப்பிடிக்கவில்லை என்று அருட்தந்தை சிறில் காமினி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.01
பாப்பரசரின் படத்தை தேர்தல் பரப்புரைக்கு பயன்படுத்த வேண்டாம் என்று தெரிவித்த பின்னரும் ஆளுங்கட்சியினர் தொடர்ந்தும் அதனைப் பயன்படுத்தி வருகின்றனர். அவர்கள் ஒழுக்கத்தை கடைப்பிடிக்கவில்லை என்று மறைமுகமாக, பாப்பரசரின் பயணத்துக்கான ஊடக மற்றும் தகவல் நிலையம் சாடியுள்ளது.
'இத்தகைய பரப்புரையுடன் தொடர்புடையவர்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவர்களாக இருந்தால், இதனை மதித்து நடப்பார்கள்' என்று கூறியுள்ளார் பாப்பரசரின் பயணத்துக்கான ஊடக மற்றும் தகவல் நிலைய பணிப்பாளர் அருட்தந்தை சிறில் காமினி.
பாப்பரசரின் படத்துடன் கூடிய சுவரொட்டிகள், பதாகைகளை, அகற்றும்படி முன்னதாக கத்தோலிக்கத் திருச்சபை அனைத்து அரசியல் கட்சிகளிடமும் கோரியிருந்தது. அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்கும் பாப்பரசரின் பயணத்தை பயன்படுத்த வேண்டாம் என்றும் கோரிக்கை விடுத்திருந்தது.
எனினும், கத்தோலிக்கத் திருச்சபையின் வேண்டுகோளை ஏற்று பாப்பரசரின் படத்துடன் கூடிய பதாகைகள் அகற்றப்படவில்லை என்பதுடன், புதிதாகவும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இந்த நிலையில், இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள பாப்பரசரின் பயணத்துக்கான ஊடக மற்றும் தகவல் நிலைய பணிப்பாளர் அருட்தந்தை சிறில் காமினி,
"எமது வேண்டுகோள் போதும் என்று நினைக்கிறோம். இத்தகையபரப்புரையுடன் தொடர்புடையவர்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவர்களாக இருந்தால், இதனை மதித்து நடப்பார்கள். நாம் அவர்கள் மீது நம்பிக்கை வைப்போம்"– என்று தெரிவித்துள்ளார்.

ப 1 விரிவு

"அத்தகைய எல்லா சுவரொட்டிகளும் அகற்றப்படும் என்று கடந்த மாதம் ஆயர்களைச் சந்தித்த போது பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ வாக்குறுதி அளித்திருந்தார். அந்த வாக்குறுதியை அவர் காப்பாற்றவில்லை'' என்று மன்னார் ஆயர் இராயப்பு யோசப் தெரிவித்துள்ளார்.

(ற–5)

# நோயற்ற இலங்கை திட்டத்தில் விழிப்புணர்வு நடவடிக்கைகள்

## இன்று முதல் ஒரு வாரத்துக்கு

யாழ்ப்பாணம், டிசெ.1
நோயற்ற இலங்கை தேசிய சுகாதார வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்டபிரிவில் ஒருவார காலம் பல்வேறுபட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் நடத்தப்படவுள்ளன.
இந்த ஒருவார கால வேலைத் திட்டம் இன்று முதலாம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 7 ஆம் திகதி வரைக்கும் நடைபெறவுள்ளன.
இன்று திங்கட்கிழமை போதைப் பொருள் தொடர்பான விழிப்புணர்வு யாழ்.இந்துக்கல்லூரியில் காலை 9 மணிக்கு நடைபெறும். செவ்வாய்க்கிழமை டெங்கு கட்டுப்பாடு மற்றும்விலங்குவிசர்நோய்க் கட்டுப்பாடு சம்பந்த மான விழிப்புணர்வு அனைத்து பொது சுகாதார பிரிவுகள்தோறும்நடத்தப்படும். புதன்கிழமை நஞ்சற்ற உணவுகள் சுகாதாரமான உணவுகள் இயற்கை உணவுகள் தொடர் பான விழிப்புணர்வுகருத்தரங்கு நாவலார் கலாசார மண்டபத்தில் இடம்பெறும். வியாழக்கிழமை புற்றுநோய் தடுப்பு சம்பந்தமான விழிப்பு ணர்வு யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்திலும் வெள்ளிக்கிழமை அரச திணைக்களங்களின் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு சனிக்கிழமை போதைப் பொருள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நாவாந் துறை ஐந்து சந்தி பகுதியிலும் ஞாயிற்றுக்கிழமை ஆன்மிகம் மற்றும் உளரீதியாக விழிப்புணர்வு நாவலர் கலாசார மண்டபத்திலும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற–17)

CMK

## தேடுகிறேன்

ஐந்து மாதம் சினையுள்ள மா வெள்ளை நிற பசு காணாமல் போயுள்ளது.
இதைப்பற்றிய தகவல்கள் அறிந்தவர்கள் இப் பசுவை மீளக் கிடைக்கக் கூடியதாக உதவி செய்தால் தகுந்த சன்மானம் வழங் கப்படும்.

தகவல் ந. ரதுரா
124/3, செல்வி வீதி,
நல்லூர்.
தொ.இல. 077 322 3136
021 490 0353

# மஹிந்த – மு.கா. சந்தித்துப் பேச்சு

ப 1 விரிவு

கொழும்பு, டிசெ.1
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதலைமையிலான குழுவினருக்கும் இடையில் நேற்று முன்தினம் மாலை முக்கிய சந்திப்பொன்று நடந்துள்ளது.
இந்தச் சந்திப்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதுவரை காலமும் முன்வைத்த பிரதான நிபந்தனைகள், அதில் நிறைவேற்றப்பட்ட, நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் தொடர்பில் பேசப் பட்டுள்ளன. அந்தக் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் மற்றும் இந்தக் கலந்துரையாடலின் பின்னரான சாதக, பாதக நிலைமையைக் கருத்தில் கொண்டே ஜனாதி பதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு அளிப்பது என்ற தீர்மானத்தை முஸ் லிம் காங்கி ரஸ் எடுக்கும் என்று கட்சியின் செயலாளர் ஹசன்அலி தெரிவித் தார்.
ஜனாதிஅழைப்பின் பேரில் நடந்ததாகக் கூறப்படும் இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன், அமைச்சர்களான பிரியதர்ஷன யாப்பா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, டலஸ் அழகப்பெரும ஆகியோர் கலந்து கொண்டனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் அதன் தலைவர் ரவூப் ஹக்கீம், செயலாளர் நாயகம் ஹசன் அலி, கல்முனை மேயர் நிசாம் காரியப்பர் ஆகியோர் க்லந்து கொண்டனர். (ற–10)

# உதய பெரேரா மாற்றம் வழமையான ஒன்றே

## பின்னணி எதுவுமே இல்லை ருவான் வணிகசூரிய தெரிவிப்பு

யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா கடந்த நவம்பர் 26 ஆம் திகதி கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். இவரது இடமாற்றம் வழக்கமானதுதான். வேறு எதுவுமில்லை – இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார். "ஒரு பிரதேசத்தில் குறிப்பிட்ட காலப்பகுதியில் பணியாற்றிய அதிகாரிகளுக்கு வழங்கப்படும் இடமாற்றமே, மேஜர் ஜெனரல் உதய பெரேராவுக்கு வழங்கப்பட்டுள்ளது" என்று ருவான் வணிகசூரிய குறிப்பிட்டார்.
"உதய பெரேரா தற்போது, கொள்கை மற்றும் பயிற்சிப் பிரிவின் பணிப்பாளர் நாயகமான நியமிக்கப்பட்டுள்ளார். "– என்றும் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார். (ற–5)


## Posts of Receptionist/Telephonist

Northern Central Hospital(pvt)ltd 342,Palaly Road, Jaffna is hereby call for applications from suitable candidates for the posts of Receptionist/ Telephonist. Applicants should prepare their own applications with qualifications and experience and send them to reach on or before 08.12.2014 to the under mentioned address.

**Manager,Human Resources,**
**Northern Central Hospital,**
**342,Palaly Road,Jaffna.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்



## டிராவிட், பொண்டிங்கை ஓரங்கட்டிய சங்கக்கார

சர்வதேச போட்டிகளில் அதிக அரைசதம் அடித்த வீரர்களில் இலங்கை அணியின் நட்சத்திர வீரர் சங்கக்காரா மூன்றாவது இடத்தில் இருக்கிறார். இங்கிலாந்து அணிக்கு எதிரான நேற்றைய போட்டியில் சங்கக்காரா 67 ஓட்டங்களை குவித்தார். இதன் மூலம் அனைத்து வடிவமான சர்வதேச போட்டிகளில் அதிக அரைசதம் எடுத்த மூன்றாவது வீரராக உள்ளார். சச்சின் 164 அரைசதத்துடன் முதலிடத்திலும், காலிஸ் 149 அரைசதத்துடன் 2வது இடத்திலும் இருக்கிறார். சங்கக்காரா (147), டிராவிட்/பொண்டிங்கை (146), ஜெயவர்த்தனே (135) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

## பல்டிக்கு தடை

உதைபந்தாட்டங்களில் கோல் அடித்தால் வீரர்கள் தலைகீழாக பல்டி அடித்து கொண்டாடும் சோமர்சால்ட் முறைக்கு, தடை விதிப்பது குறித்து பிபா யோசித்து வருகிறது.

உலகக் கிண்ணத் தொடரில் அதிக கோல் அடித்த வீரர்களில் முதலிடத்தில் (16) இருப்பவர் ஜெர்மனி வீரர் குளோஸ், (36). இவர் கோல் அடித்தவுடன் அப்படியே தலை கீழாக பல்டி அடித்து கொண்டாடுவார். இதை அவ்வளவு எளிதில் யாரும் மறக்க முடியாது. தற்போது நடக்கும் ஐ.எஸ்.எல்., தொடரின் முதல் போட்டியில் கோல்கட்டா, மும்பை அணிகள் மோதின. இதில், தொடரின் முதல் கோல் அடித்தார் கோல்கட்டா வீரர் பிக்ரு. இதை விட, பிக்ரு சோமர்சால்ட் முறையில், டைவ் அடித்தது தான் மைதானத்தில் இருந்த ஒட்டு மொத்த ரசிகர்களையும் கவர்ந்தது.

இதனிடையே, மிசோரமில் நடந்த மாநில அளவிலான பிரிமியர் லீக் உதைபந்துத் தொடரில், பெத்லகேம் அணிக்காக கோல் அடித்த உற்சாகத்தை பீட்டர் ஜியாக்சங்ஜுவாலா, 23, அப்படியே தலைகீழாக குதித்து கொண்டாடினார். அப்போது எதிர்பாராத விதமாக இவரது முதுகுத்தண்டு அடிபட, மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஐந்து நாள்களுக்குப் பின் சிகிச்சை பலன் தராத நிலையில், பீட்டர் உயிரிழந்தார். இறக்கும் நிலையில் தனது கண்களை தானம் செய்ய வேண்டும் என்ற வேண்டுகோள் விடுத்தார். ஜேர்மனி வீரர் குளோஸ் மீது ஆர்வம் கொண்ட இவர், அவரைப் போல, வால்ட் அடிக்க முயன்றதாக, இவரது சக வீரர் கூறியுள்ளார்.

இதையடுத்து, சோமர்சால்ட் கொண்டாட்டத்தை தடை செய்யும் முயற்சியில் சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா) இறங்கியுள்ளது. (ந)

## 16 ஆட்டங்களில் ரியல் மாட்ரிட் தொடர் வெற்றி

கழக அணிகளுக்கான உதைபந்தாட்ட போட்டிகளில் தொடர்ந்து 16 ஆட்டங்களில் ரியல் மாட்ரிட் அணி வெற்றி பெற்றுள்ளது. அதன் மூலம், லா லிகா தொடரில் புள்ளிகள் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.

ஸ்பெயினில் உள்ள கழக அணிகளுக்கு இடையிலான லா லிகா தொடரின் லீக் ஆட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் சாம்பியன்ஸ் லீக் சாம்பியனான ரியல் மாட்ரிட்டும், மலாகா அணியும் மோதின.

18ஆவது நிமிடத்தில் ரியல் மாட்ரிட் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ கொடுத்த கிராஸ்' கரீம் பென்ஸிமா கோல் அடிக்க, முதல் பாதியில் ரியல் மாட்ரிட் 1:0 என முன்னிலை பெற்றது.

ஆட்டம் முடிவதற்கு இரண்டு நிமிடங்கள் இருந்தபோது, ரியல் மாட்ரிட் வீரர் கேரத் பேல் ஒரு கோல் அடித்தார். இதற்கிடையே, இரண்டாவது மஞ்சள் அட்டை பெற்ற ரியல் மாட்ரிட் வீரர் இஸ்கோ வெளியேறினார் ஸ்டாப்பேஜ் டைம்' எனப்படும் கூடுதல் நேரத்தில் மலாகா அணிக்கு சான்டா க்ரூஸ் ஒரு கோல் அடித்தார்.

முடில் 2:1 என ரியல் மாட்ரிட் வெற்றி பெற்றது. இந்த சீசனில் இதுவரையில் நடைபெற்ற கழக அணிகளுக்கு இடையிலான 16 ஆட்டங்களில் (சாம்பியன்ஸ் லீக் உள்பட) ரியல் மாட்ரிட் அணி தொடர்ந்து வெற்றி பெற்றுள்ளது. ஆனால், முதல் முறையாக ரொனால்டோ, லா லிகா தொடரில் கோல் அடிக்கவில்லை.

## தொடர்ச்சிகள்...

### தமிழ்

அதில் 'ஒரே வானத்தின் கீழ் ஒரே விளை நிலமாக எமது நாடு' என்ற வாசகம் மும்மொழியிலும் எழுதப்பட்டிருந்தது. சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூலமான வசனங்கள் சரியாக இருந்த போதும், தமிழ் மொழி மூலமான வாசகம் பெரும் தமிழ்க் கொலையுடன் தவறாக எழுதப்பட்டிருந்தது.

பொது எதிரணி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர் மைத்திரிபால சிறிசேன நடத்தும் முதலாவது ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக் கூட்டம் இதுவாகும். அவரது சொந்த ஊரான பொலநறுவையில் அந்தக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் பொது எதிரணிக் கட்சிகள் பலவும் கலந்து கொண்டன. (ந-5)

### தேர்தல்

என்று எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். இந்தநிலையிலேயே அமைச்சர் நவீன் திஸநாயக்கா பதவி விலகல் கடிதத்தைக் கையளித்துள்ளார்.

அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சரான நவீன் திஸநாயக்க கடந்த வியாழக்கிழமை, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவுக்குச் சென்று, எதிர்கட்சியினரைச் சந்தித்திருந்தார். அதனையடுத்து அவர் பொது எதிரணியில் இணைந்து கொள்வார் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

இந்தநிலையில் நேற்றைய தினம் அவர் தனது அமைச்சுப் பதவியில் இருந்து விலகுவதாக ஜனாதிபதி செயலகத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

இதனை ஜனாதிபதி செயலகமும் உறுதிப்படுத்தியுள்ளது. பொது எதிரணிக்கான ஆதரவை இன்றைய தினம் உத்தியோகபூர்வமாக அவர் வெளியிடவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதும், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமாக இருந்த மைத்திரிபால சிறிசேன பொது எதிரணியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். இதன் போது அமைச்சர்களாக இருந்த ராஜித சேனாரட்ண, துமிந்த திஸநாயக்கா, குணரட்ண ஆகியோரும் எதிரணிக்குத் தாவினர்.

மேலும் 20 அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர், வரவு – செலவுத் திட்ட வாக்கெடுப்புடன் கட்சி தாவுவார்கள் என்றும் அவர்களது பெயர்களும் வெளியிடப்பட்டிருந்தது. ஆனாலும் வரவு – செலவுத் திட்ட வாக்கெடுப்புடன் ஒருவரும் கட்சி தாவவில்லை. அத்துடன் கட்சி தாவுவார்கள் என்று பெயர் குறிப்பிடப்பட்ட அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் கட்சி மாறப்போவதில்லை என்று பகிரங்கமாகத் தெரிவித்திருந்தனர். அவர்களுள் அமைச்சர் நவீன் திஸ நாயக்காவும் ஒருவர். இந்தப் பின்னணியில் அமைச்சர் நவீன் திஸநாயக்கா தனது அமைச்சர் பதவியைத் துறந்துள்ளார். அத்துடன் பொது எதிரணிக்கான ஆதரவை அவர் இன்று தெரிவிக்கவுள்ளார். (ந-5)

### தடைகளை

அதைத் தடுப்பதற்கு பல்வேறு முயற்சிகள் முன்னெடுக் கப்பட்டன என்றும் இருப்பினும் அதனையும் தாண்டி கூட்டம், பெருமளவு மக்கள் கூட்டத்துடன் சிறப்பாக நடந்து முடிந்துள்ளது.

பொலன்நறுவையில் நேற்று நடைபெற்ற பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் முதலாவது கூட்டம் என்றும் தெரி விக்கப்பட்டது.

கூட்டம் நேற்று ஆரம்பமா வதற்கு முன்னதாக, கூட்டத்தை நடத்துமிடத்தில் பிக்குமார்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட கூடாரத்தை பாதுகாப்பு படையினர் நேற்று முன்தினம் சனிக்கிழமையே அகற்றியிருந்தனர். அத்துடன் நேற்று அதிகாலை முதல் பராக்கிரமபாகு குளத்தில் மேலதிக நீரை வெளியேற்றும் வான்கதவுகள் திறக்கப்படவுள்ளது என்ற வதந்தி பொலன்நறுவை பூராகவும் பரப்பப்பட்டிருந்தது. அவ்வாறு நீர் திறந்து விடப்பட்டால் மைத்திரிபாலவின் கூட்டத்துக்கு வருகை தரும் மக்கள் திடீர் வெள்ளத்தில் சிக்கிக் கொள்ள நேரிடும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது. எனினும் இதையெல்லாம் மீறி பொதுமக்கள் பெருமளவில் பொதுக்கூட்டத்தில் திரண்டிருந்தனர்.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால,

"ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களே நான் உங்களை தனிப்பட்ட ரீதியில் எதிர்க்கவில்லை. உங்கள் குடும்பத்தை தனிப்பட்ட ரீதியில் எதிர்க்கவில்லை.

நாட்டில் அதிகரித்துள்ள இலஞ்சம், ஊழல், வீண்விரயம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் குடும்ப ஆட்சி என்பவற்றையே நான் எதிர்க்கின்றேன்.

மகிந்த ராஜபக்ஷ நாட்டில் உள்ள சகல அரசியல் கட்சிகளையும் அழிக்க தயாராகி வருகிறார். அவர் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்தால், நாட்டில் உள்ள சகல அரசியல் கட்சிகளையும் தரைமட்டமாக்கி விடுவார்.

நான் அனைத்தையும் அறிந்திருக்கின்றேன். எனக்கு தெரிந்த விடயங்களை நான் எதிர்காலத்தில் கூறுவேன்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை கொண்டிருந்த அரசு இலங்கை மக்களுக்காக எதனை செய்தது?. மூன்றாவது தடவையாகவும் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானால் அவர் ஒரு சர்வதிகாரியாகவே மாறுவார்.

விடுதலைப்புலிகள் என்னைக் கொலை செய்ய முயற்சித்தனர். எனினும் அரசு என் மீது புலி முத்திரைக்குத்த முயற்சிக்கின்றது – என்றார். (ந-5)

### காணி

இது போன்றதொரு நோய் எங்கள் அரசுக்கு ஏற்படும் என்று சொன்னேன். தயவு செய்து இதைப் பாருங்கள் என்று கூறினேன். எமது கட்சியில் விரக்தியடைந்தவர்கள் உள்ளனர். அதையும் சொன்னேன். மகன் நாமல் ராஜபக்ஷ தம்புள்ளை வந்த போது எனது வீட்டுக்கு வந்திருந்தார். மகனே, பிரச்சினை ஒன்றுள்ளது. இதனைப் பாருங்கள் என்று கூறினேன். ஆனால் இவ்வாறு இடம்பெறாது என்று அவர்கள் என்னிடம் சொன்னார்கள்.

நான் பொலிஸ் அதிகாரி என்பதனை அவர்கள் மறந்துவிட்டார்கள். நாம் உள்ளத்திலிருந்து இதனைக் கூறுகின்றோம். ஏன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பது எமது வாழ்க்கை. எனது தந்தை ஏடுகளை விற்பனை செய்யும் அப்பாவி. அவருக்கு எவ்வளவு பிரச்சினைகள் இருந்தாலும், கட்சியை விட்டுச் செல்ல வில்லை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியை எதிர்காலத்தில் யாரும் அடிமைப்படுத்திக் கொள்ள விடமாட்டேன். கட்சியை சரி செய்து கொண்டு தான் தேர்தலொன்றுக்குச் சென்றிருக்க வேண்டும். இது எனது நிலைப்பாடு – என்றார். (ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொலைக்களமாகும் கிரிக்கெட் ஆடுகளம்

### பந்து தாக்கி நடுவர் சாவு

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் பிலிப் ஹியூக்ஸை தொடர்ந்து நடுவர் ஒருவர் பந்து தாக்கி உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

ஹியூக்ஸ் மரணம் அடைந்து 4 நாள்கள் தான் ஆகிறது. இந்த சோகத்தில் இருந்து மீள்வதற்குள் இஸ்ரேல் நாட்டில் உள்ள அஸ்டோட் நகரில் நடந்த தேசிய கிரிக்கெட் லீக் போட்டியில் நடுவர் ஒருவர் பந்து தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தப் போட்டியில் 58 வயதான ஹில்லல் ஒஸ்கர் நடுவராக பணியாற்றினார். அப்போது துடுப்பாட்ட வீரர் அடித்த பந்து அவரை நோக்கி வந்தது. அது அவரது தாடையைத் தாக்கியது. இதில் பலத்த காயத்துடன் அவர் நிலை குலைந்து கீழே விழுந்தார். உடனடியாக அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்தார். ஒஸ்கரின் மரணத்துக்கு இஸ்ரேல் கிரிக் கெட் சங்கம் அனுதாபம் தெரிவித் துள்ளது.

இதுகுறித்து அதன் தலைவர் குட்கோர் கூறுகையில், இந்த செய்தி எங்களை மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. அவர் இஸ்ரேல் அணி வீரராக, அணித் தலைவராக கடமையாற்றியவர். தற்போது சர்வதேச நடுவராக இருந்தார். அவரது மறைவுக்கு அனைத்து வீரர்களும், இஸ்ரேல் கிரிக்கெட் சங்கமும் இரங்கல் தெரிவித்துள்ளது என்று கூறியுள்ளார். (ற)

## சிக்ஸர் அடித்து நியூஸி. சாதனை



பாகிஸ்தானுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 19 சிக்ஸர்களை அடித்து புதிய சாதனை நிகழ்த்தியுள்ளது.

இதற்கு முன்பாக சிம்பாப்வே அணிக்கு எதிராக 2003 ஆம் ஆண்டு பெர்த் டெஸ்ட் ஆட்டத்தில் ஒரு இன்னிங் ஸில் 17 சிக்ஸர்களை ஆஸ்திரேலிய அணி அடித்திருந்ததே சாதனையாக இருந்தது.

இந்திய அணி மும்பையில் 2009ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக 15 சிக்ஸர்களை ஒரு இன்னிங்ஸில் அடித்து 4ஆம் இடத்தில் உள்ளது. பாகிஸ்தான் அணி நியூசிலாந்துக்கு எதிராக 2002ஆம் ஆண்டு லாகூர் டெஸ்ட் ஆட்டத்தில் 15 சிக்ஸர்களை அடித்திருந்தது.

நியூசிலாந்து அடித்த 19 சிக்ஸர்களில் 11 சிக்ஸர்கள் பிரெண்டன் மெக்கல்லம் அடித்துள்ளார். ராஸ் டெய்லர், கோரி ஆண்டர்சன், டிம் சவுதீ ஆகியோர் தலா 2 சிக்ஸர்கள் அடித்தனர். வில்லியம்சன், கிரெய்க் ஆகியோர் தலா 1 சிக்ஸர் அடித்தனர். (ற)

## பறிபோகுமா ஹோக்லியின் வாய்ப்பு



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் டோனி களமிறங்குவதற்கான சாத்தியம் காணப்படுவதால் கோஹ்லியின் அணித்தலைவர் வாய்ப்புப் பறிபோகுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்தியா– ஆஸ்திரேலியா அணிகள் இடையேயான 4 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரின் முதல் ஆட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி பிரிஸ்பேனில் நடக்கவிருந்தது. ஆனால் ஆஸ்திரேலிய வீரர் ஹியூக்ஸ் உள்ளூர் போட்டியின் போது பந்து தலையில் தாக்கி உயிரிழந்தார். அவரது இறுதிச்சடங்கு 3ஆம் திகதி நடக்க இருக்கின்றது. இதை தொடர்ந்து இந்தியா – ஆஸ்திரேலியா மோதும் முதல் டெஸ்ட் ஆட்டம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. போட்டி எப்போது நடைபெறும் என்ற விவரம் அறிவிக்கப்படவில்லை. முதல் டெஸ்ட் தள்ளி வைக்கப்பட்டதால் இந்திய அணித்தலைவர் டோனி 4 டெஸ்ட் போட்டியிலும் ஆடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காயம் காரணமாக முதல் டெஸ்டில் டோனி ஆடமாட்டார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது. 2ஆவது டெஸ்டில் இருந்து அணியில் இணைந்து கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

> **“முதல் டெஸ்ட் தள்ளி வைக்கப்பட்டதால் இந்திய அணித்தலைவர் டோனி 4 டெஸ்ட் போட்டியிலும் ஆடுவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது. காயம் காரணமாக முதல் டெஸ்டில் டோனி ஆடமாட்டார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது. டோனி களமிறங்கினால் கோஹ்லியின் தலைவர் பதவி பறிபோகும்.”**

இந்தநிலையில் பிரிஸ்பேன் டெஸ்டை டிசம்பர் 19, 23ஆம் திகதிகளில் நடத்தினால் டோனி தொடர் முழுவதும் ஆட வாய்ப்பு உள்ளது. இது ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் முடிவைப் பொறுத்து இருக்கிறது. டோனி 4 டெஸ்டிலும் விளையாடினால் விராட் கோஹ்லி முதல் முறையாக டெஸ்டில் அணித்தலைவர் பொறுப்பை ஏற்கும் வாய்ப்பு பறிபோகும். இதேபோல விர்த்திமான் சகாவுக்கும் வாய்ப்பு இல்லாமல் போகும். அவர் பயிற்சி ஆட்டத்தில் அரைச்சதம் அடித்து இருந்தார். முதல் டெஸ்ட் போட்டி 5ஆம் திகதி தொடங்க வாய்ப்பு உள்ளது என்று இந்திய அணியின் செய்தி தொடர்பாளர் டாக்டர் ஆர்.என். பாபா தெரிவித்துள்ளார். (ற)

### ரோஹித்தை புகழும் லாரா

இந்திய அணி வீரர் ரோஹித் சர்மாவைப் புகழ்ந்துள்ளார் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பிரையன் லாரா. இலங்கைக்கு எதிரான 4ஆவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர் ரோஹித் சர்மா இரண்டாவது முறையாக இரட்டைச் சதம் விளாசி சாதனை படைத்தார். இவரது உலக சாதனை குறித்து மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த லாரா கூறுகையில், "நாங்கள் இங்கிலாந்தின் மான்செஸ்டர் மைதா னத்தில், விவியன் ரிச்சர்ட்ஸ் எடுத்த 189 ஓட்டங்கள் என்ற சாதனையுடன் கிரிக்கெட் டில் வளர்ந்தவர்கள். அப்போதெல்லாம் ஒருநாள் ஆட்டத்தில் 200 ஓட்டங்கள் சாத்தி யமே என்று நான் நினைத்தேன். ஆனால் இப்போது ரோஹித் சர்மாவின் 264 ஓட்டங் கள் என்ற உலக சாதனை எட்ட முடியாத ஒன்று என்றே எனக்குத் தோன்றுகிறது."—என்று தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்



## நியூஸி. அபார ஆட்டம் தொடரை சமநிலையாக்கியது

சார்ஜாவில் நடைபெற்ற பாகிஸ்தான் நியூஸிலாந்து அணிகளுக் கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய நியூஸிலாந்து வெற்றியைத் தன்வசமாக்கித் தொடரை சமநிலைப்படுத்தியது.

ஏற்கனவே நடந்து முடிந்த இரண்டு போட்டிகளில் முதல்போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றும் இரண்டாவது போட்டி சமநிலையிலும் முடிவடைந்தது. அதனால் 1:0 என்ற அடிப்படையில் பாகிஸ்தான் அணி தொடரில் முன்னிலை வகித்தது. இறுதி ஆட்டத்தில் கட்டாயம் வெற்றி பெற்று தொடரை சமநிலைப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் நியூஸிலாந்தும், போட்டியை வெற்றிபெற்றோ அல்லது சமநிலையில் முடித்தோ தொடரைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கில் பாகிஸ்தானும் விளையாடின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான்அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 351 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அதிகபட்சமாக ஹபீஸ் 197, அலி 39, மிஷ்பா 38 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் நியூஸிலாந்து சார்பாக கிறைக் 7 இலக்குகளையும் விக்டோரி, சௌத்தி, சொட்ஹி ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது ஆட்டத்தை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 690 ஓட்டங்களை குவித்து 339 ஓட்டங்கள் முன்னிலையுடன் இருந்தது. அதிகபட்சமாக மக்கலம் 202, வில்லியம்சன் 192, கிறைக் 65 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பாகிஸ்தான் சார்பாக ரஹற் அலி மற்றும் சாஜ் ஆகியோர் தலா 4 இலக்குகளையும் ஹபீஸ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க வேண்டுமாயின் 339 ஓட்டங்கலள நிச்சயம் பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணிக்கு அதன் முன்வரிசை வீரர்களான ஹபீஸ் (24), மசூட் (4), அலி (6), யுனிஸ்கான் (0), மிஷ்பா (12) ஆகியோர் ஏமாற்றமளித்தனர். சொற்ப ஓட்டங்களுடன் அவர்கள் வெளியேற ஒரு கட்டத்தில் 63 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து தள்ளாடியது பாகிஸ்தான். இன்னிஸிங்ஸ் தோல்வியை தவிர்ப்பதற்காக தனிமனிதனாக நின்று போராடிய ஷவ்பிக் அதிகபட்சமாக 137 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த பின் வரிசை வீரர்களும் தாக்குப் பிடிக்காமல் போகவே பாகிஸ்தான் அணி சகல இலக்குகளையும் இழந்து 259 ஓட்டங்களை மட்டுமெ பெற்று இன்னிங்ஸ் மற்றும் 80 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்து வீச்சில் நியூஸிலாந்து சார்பாக பௌல்ட் 4 இலக்குகளையும் கிறைக் 3 இலக்குகளையும், சொட்ஹி 2 இலக்குகளையும், விக்ரோறி ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக கிறைக் மற்றும் தொடராட்ட நாயகனாக ஹபீஸ் தெரிவுசெய்யப்பட்டனர்.

மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரில் இரு அணிகளும் தலா 1 போட்டியில் வென்றனர். தொடர் சமநிலையில் முடிந்தது.

(ந–ரி)


### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தாயின் மடியில் 04 08 1925



இறைவன் அடியில் 01 11 2014

**அமரர் திரு. பொன்னையா சண்முகராஜா**

அல்லும் பகலும் அயரா உழைத்து அற்புதமாக உயர்வடைந்து
மகிழ்வாக எம்மை வாழவைத்த தெய்வமே ஆறுமோ எம் துயரம்
நிலைமாறுமோ உம் நினைவு எம் உயிருள்ளவரை மாறாதையா உங்கள் நினைவு

கடந்த 01.11.2014 சனிக்கிழமை இறைபாதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதி நல்லடக்கத்தில் கலந்து கொண்டு ஆறுதல் கூறிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும், தொடர்பு சாதனங்கள் மூலம் உள்நாடு வெளிநாடுகளில் இருந்தும் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள். 077 782 1985



## Pearl Marketing

வாடிக்கையாளர்களுக்கு,

SLS, ISO22000, HACCP, GMP ஆகிய சான்றிதழ்களைக் கொண்ட எமது Pearl போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் சுகாதார அமைச்சு பதிவு இல. CFA/BW/27/2012-10 ஆகும்.

Pearl போத்தலில் அடைக்கப் பட்ட குடிதண்ணீர் தொடர்பாக வேண்டும் என்று சிலர் போலிப் பிரசாரத்தில் ஈடுபடுவதாக எமது வாடிக்கையாளர்களால் அறியத்தரப்படுவதால் அதில் எவ்வித உண்மையும் இல்லை என்பதை அறியத் தருவது டன் மேலதிக தொடர்புகளுக்கு

Office Ratnapura
Hot Line : + 94717600 400
Tel: + 94 45 2230 400
45 5670155

0717600403
0710600407
0766408632 } Jaffna

**Pearl Natural water (Pvt)Ltd.**
Niriella, Udaniriella,
Ratnapura. (54464)



**பரீட்சை வழிகாட்டி பயிற்சிச் செயலமர்வு2014**

**பாடம்: தமிழ் மொழியும் இலக்கியமும்**
22 T I II III

**இடம்: றோயல் அக்கடமி (யாழ்ப்பாணம்)**
வளவாளர்: திரு. இல. நிஷாந்தன்
(யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)
கட்டணம் ரூபா 400 மட்டும்
**காலம்** 01/12/2014 (திங்கள்) மாலை 3.00
02/12/2014 (செவ்வாய்) மாலை 3.00
(54530)



**புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுகள் டிசெம்பர் 31 வரை**

லங்காடைல், லங்கா வோல்டைல் உட்பட அனைத்து மாபிள்கள் மற்றும் கொமட் செற், பெயின்ட் வகைகளுக்கும் 25% வரை விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

இலவசமாக விநியோகம் செய்யப்படும்.

(நிபந்தனைக்குட்பட்டது)

**நியூகமல் செராமிக்ஸ்**
37, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2085, 021 221 9305





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ட[illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.